Koviloor Digital Library

திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு - ஆடி - 2025 - ஆகஸ்ட் | இணைய வழி - மலர் - 2 - இதழ் - 12

அருள்மிகு துர்க்கை அம்மன்

துர்காகுண்ட், வாரணாசி

Koviloor Digital Library

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு – ஆடி

2025– ஆகஸ்ட்

இணையவழி மலர் 2 – இதழ் 12

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

தீபா ராஜேஸ்வரி

கோவிலூர்

பொருளடக்கம்

பக்கம்

1. ஆசிரியுரை.. 3
2. கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம்.. 10
3. அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப !.................................. 13
4. திருவிளையாடற் புராணம் தொடர்.......... 17
5. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்......................... 25
6. பக்தியால் வென்ற சுதர்சனன்.................. 29
7. சிவாலயங்களின் சிறப்புகள்..................... 33
8. திவ்ய தேச கவிதை தரிசனம்.......... 40
9. பெரியபுராண கதை களம்....................... 51
10. தென்சபாநாயகர் கோவில் தரிசனம்........ 52
11. ஒலிப்பேழை.. 53
12. பயிற்சிப்பேழை...................................... 54
13. கோவிலூர் ஆண்டவர் நூலகம்............... 55
14. முந்தைய இதழ்கள்................................. 57

Koviloor Digital Library

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

காசி, இராமேசுவரம், அலகாபாத் – திரிவேணி சங்கமம் சிவார்ப்பணம்

சென்ற மாதம் அறிவித்தது போல் இந்த மாதம் தேவகோட்டை ஏ.எல்.ஏ.ஆர் கட்டளை, திரிவேணி தீர்த்தத்தை ராமேஸ்வரத்தில் சிறப்பு அபிடேகங்கள் செய்து வருகிறார்கள்.

அதேபோல் ராமேஸ்வரத்தில் இருந்து கோடித் தீர்த்தம் காசியில் உள்ள நம் இந்த மாதம் 7ம் தேதி அன்ன ஷேத்திரத்திற்கு வந்து அங்கிருந்து 8ம் தேதி அலங்கார வண்டியில் ஊர்வலமாகக் காசி விஸ்வநாதர் கோவிலுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு

பாரம்பரிய வரவேற்பு அளித்து, அந்த தீர்த்தத்தை கோவில் சார்பாக கோவிலின் தலைமை நிர்வாக அதிகாரி திரு.விஸ்வ பூசன் மிஸ்ரா அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அதற்கு அடுத்த நாள் பிரதேச ஆணையர் திரு.ராஜலிங்கம் ஐ.ஏ.எஸ் அவர்கள், மாவட்ட தலைவர் திரு.சத்தியேந்திர ஜெயின் ஐ.ஏ.எஸ் அவர்களுடன் நாமும் தேவகோட்டை

Koviloor Digital Library

ஏ.எல்.ஏ.ஆர் அறக்கட்டளை சார்பாக திரு.சி.ஆர்.எம்.அருணாச்சலம் அவர்களும் காசி விஸ்வநாதருக்கு சிறப்பு அபிடேகம் செய்தோம்.

இந்தப் புனித தீர்த்தப் பரிமாற்றம் மாதந்தோறும் நடைபெறும் நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் வடக்கும் தெற்கும் புனித தீர்த்தம் வா யிலாக இணைந்திருப்பதாக காசி நகரவாசிகள் மகிழ்ச்சியுடன் தெரி வித்தார்கள்.

விரைவில் ராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு கோடித்தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு காரில் ஐந்து நாள் பயணமாக செல்வதென்றும் வழியில் உள்ள முக்கியமான சிவஸ்தலங்களில் சிறப்பு பூஜைகள் மற்றும் அபிஷேகங்கள் இந்த தீர்த்தத்தை கொண்டு செய்வது என்றும் உத்தேசித்துள்ளோம்.

அதில் பங்கு பெற பலரும் ஆர்வம் காட்டி உள்ளார்கள் தேதி முடிவானவுடன் திருநெல்லை வாயிலாகவும் நேரிலும் தகவல் தெரிவிக்கிறோம். விருப்பமுள்ளவர்கள் அவரவர் சொந்த வாகனத்தில் எங்களுடன் சேர்ந்து கொள்ளலாம்.

ஆயிரம் என்ற எல்லையைக் கடந்து பல்லாயிரம் அன்பர்கள் காண்பதாக விரியும் காசி மெய்நிகர் காட்சி (வெர்ச்சுவல் ரியாலிட்டி).

மேனாள் நீதியரசர் டத்தோ ஸ்ரீ முனைவர் மெ.சொக்கலிங்கம் அவர்கள் பொருள் உதவியுடன் சுமார் 1000 முதியோர்களுக்கு காசி மெய்நிகர் காட்சி இதுவரை காண்பிக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் திட்டத்தில் முதல் கட்டம் மட்டுமே. இன்னும் பல ஊர்களிலும் அவர்கள் முன்னெடுப்பு செய்து அந்தந்த ஊர் முதியோர்களுக்கும் இந்த காட்சி காண்பிக்கப்பட வேண்டும் என்று விருப்பம் தெரி

Koviloor Digital Library

வித்துள்ளார்கள்.

இதைப் பார்த்த பலர் நம்மை அணுகி அவரவர் இல்லங்களில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளில் இந்த காட்சியை காண்பிக்க இயலுமா என்று வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அந்த வேண்டுகோளுக்கு இணங்கி முதலில் நாட்டு கோட்டை நகரத்தார் டிவி உரிமையாளர் இல்ல திருமணத்தில் 50 பேர் இந்த காட்சியை கண்டார்கள். சாந்தி மற்றும்

சதாபிஷேக நிகழ்ச்சிகளில் இந்த காட்சியை அவரவர் இல்லங்களில் காட்சிப்படுத்தலாம் என்ற எண்ணம் நமக்கு இப்போது எழுந்துள்ளது ஆகவே அவரவர் இல்லங்களில் நடைபெறுகின்ற இந்த முக்கிய நிகழ்ச்சிகளில் முதியோர்களுக்கும் முக்கிய உறவினர்களுக்கும் காசியை காட்சிப்படுத்தவும், அதன் மூலம் பலரைக் காசி விசுவநாதர் தரிசனம் செய்ய வைத்த புண்ணியமும் கிடைக்குமாறு செய்ய வேண்டுகிறோம்.

இது தொடர்பாக மேலும் விபரங்கள் அறிய, நம் மடாலயத்தில் உள்ள திரு.முத்தப்பன் அவர்களை 9789336720 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

சென்னையிலும் காசி மெய் நிகர் காட்சி

சென்னையில் வாழ்கின்ற பலரும் நம்மிடம் இந்த காட்சியை சென்னையிலும் காண வழி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அதன் பொருட்டு சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள நம் மடாலயத்தில் இந்த மெய்நிகர் காட்சி காண்பிக்கும் ஒரு உபகரணம் வைக்கப்பட்டுள்ளது. இதைக் காண விரும்பும் அன்பர்கள், 8056103456 என்ற எண்ணை தொடர்பு கொண்டு முன்னதாகவே நேரத்தை முடிவு செய்து அங்கு சென்று பார்க்கலாம்.

காசி மெய் நிகர் காட்சியைக் கண்ட காசிவாசி திருப்பனந்தாள் சுவாமிகள்

திருப்பனந்தாள் ஆதீனம் 21ஆம் பட்டம், எஜமான் சுவாமிகள் அண்மையில் முக்தி அடைந்தார்கள். திருப்பனந்தாள் ஆதீனம் என்பது காசி

Koviloor Digital Library

திருப்பனந்தாள் ஆதீன 21 வது பட்டம் எஜமான் சாமிகள்

மடம் என்ற பெயரில் துவங்கப்பட்டது. அந்த மடத்தை துவக்கிய குமரகுருபர சுவாமிகள் தருமையாதீனம் நாலாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் தீட்சை பெற்று அவரது ஆணைப்படி சைவ சித்தாந்தத்தை பரப்பும் எண்ணத்தோடு காசிக்குச்' சென்றார் அங்கு காசி விஸ்வநாதர் கோவில் பூசை இன்றி பூட்டப்பட்டு இருந்தது. கேதாரேஸ்வரர் கோவில் என்ற கோவில் மிகவும் பாழடைந்து இருந்தது. கேதாரீஸ்வரர் கோவிலை செய் நேர்த்தி செய்யவும் காசி விஸ்வநாதர் கோவிலை தினசரி பூஜைக்கு திறக்கவும் அப்போது இருந்த முகலாய மன்னரிடம் வேண்டுகோள் விடுத்தார். அந்த மன்னன் எங்கள் மொழியில் நீங்கள் பேசினால் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவோம் என்று சொன்னதாகவும், குமரகுருபரடிகள் சரஸ்வதிஅம்பாளின் கருணை வேண்டி சகலகலாவல்லி மாலை பாடியதாகவும், அதன் மூலம் அவருக்கு இந்துஸ்தானி மொழி பேசும் திறன் வந்ததாகவும், மறுநாளே ஒரு சிங்கத்தின் மீதேறி இந்த முகலாய மன்னனின் அரண்மனைக்குச் சென்றதாகவும், அதனால் வியப்புற்ற மன்னன் குமரகுருபர அடிகளின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்ததாகவும் வரலாற்று பதிவுகள் உள்ளன.

அதற்குப்பின்னால் குமரகுருபரடிகள் திருப்பனந்தாளுக்கு வந்து திருப்பனந்தாள் காசிமடம் என்ற

Koviloor Digital Library

மடத்தை நிறுவினார்.

அந்த மடத்தின் 21 வது அதிபராக இருந்த ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமி சுவாமிகள் என்ற எஜமான் சுவாமிகள் 96 வயதில் உடல் நலம் குன்றி இருந்த செய்தி பழனி சாது சாமிகள் மூலமாக நாம் அறிந்தோம். உடனே திருப்பரந்தாள் ஆதீனம் இளைய பட்டம் ஸ்ரீலஸ்ரீ சபாபதி சுவாமிகள் அவர்களிடம் எஜமான்

ஸ்ரீலஸ்ரீ சபாபதி சாமிகள் திருப்பனந்தாளாதின 22 ஆவது பட்டம்

சுவாமிகளுக்கு நம் காசி மெய்நிகர் காட்சியைக் காண்பிக்க விருப்பம் தெரிவித்தோம். அவர்களும் அதற்கு ஒப்புதல் தந்தார்கள்.நாம் திருப்பநந்தாள் சென்று எஜமான் சாமிகளிடம் ஆசியும் பெற்று அவர்கள் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு காசி விஸ்வநாதர் எழுந்தருளும் இரண்டு நிமிட காட்சியை அவர்களுக்கு காண்பித்தோம் இந்த நிகழ்வுக்கு சுமார் ஒரு வாரத்திற்குள் சுவாமிகள் முக்தி அடைந்தார்கள். அவர்களது இறுதிக்காலத்தில் காசியில் துவங்கிய மடாதிபதி காசிக் காட்சியைக் கண்டு முக்தி அடைய நம்மையும் ஒரு கருவியாக்கிய காசி விஸ்வநாதரின் அருளை நினைத்து மெய்சிலிர்க்கிறோம்.

இப்போது 22 ஆம் பட்டமாக பதவி ஏற்றுள்ள ஸ்ரீலஸ்ரீ சபாபதி சுவாமிகள் மிகச் சிறந்த அறிவாளி பெரிய அளவில் சாதனை புரியும் திறன் உள்ளவர்கள். அவர்கள் காலம் அவர்களுக்கு முன்னால் அதிபராக இருந்த எஜமான் சுவாமிகள் காலம் போல பொற்காலமாகவும் மடத்தை நிறுவிய குமரகுருபர அடிகள் போல பெரும் சாதனை படைக்கும் அதிபராகவும் இருக்க எல்லாம் வல்ல காசி விஸ்வநாதர் அருள்புரிவாராக.

Koviloor Digital Library

இளையாத்தங்குடியில் அறப்பணிகள் துவக்கம்

இளையாத்தங்குடி ஒக்கூர் உடையார் பிரிவு புதிய பல்நோக்கு மண்டபம் திறப்பு விழாவில் நாம் கலந்து கொண்டு அந்த மண்டபத்தை திறந்து வைத்து ஆசீ உரையாற்றினோம். அந்த நிகழ்வை இந்த காணொலி மூலம் காணலாம்.

பள்ளத்தூரைச் சேர்ந்த திரு.அம்பா பழனியப்பன் அவர்கள் சென்னையில், 1971இல் அவர்கள் பாட்டனார் கட்டிய பிள்ளையார் கோவிலை முழுவதுமாக மாற்றி மிக அருமையான கல் திருப்பணி செய்து மூலவராக விநாயகரும், துர்க்கை அம்மன், காசி விஸ்வநாதர் விசாலாட்சி அம்மை, கோதண்டராமருடன் பக்த ஆஞ்சநேயர், சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை, ஐயப்பன், நடராஜர் சிவகாமி அம்மை மாணிக்கவாசகர், நவகிரகங்கள் மற்றும் பைரவர் சன்னதிகள் அழகாக கட்டப்பெற்று குடமுழுக்கு விழா 28ஆம் தேதி காலை நடைபெற்றது அதில் கலந்து கொண்டது நமக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தது. அந்தக் கோவில்

Koviloor Digital Library

அமைந்துள்ள நேர்த்தியைக் கண்டால் அதை கட்டியவர்களின் மனதில் இறைவனை எவ்வளவு அழகாக காட்ட வேண்டும் என்ற எண்ணத்தை முழுவதும் பிரதிபலிப்பதாக உள்ளது அதை அனுபவிப்பதற்காக சென்னை வாழ் மக்களும், சென்னைக்கு செல்பவர்களும் கண்டிப்பாக அந்த கோவிலுக்கு செல்ல வேண்டும்.

கோவிலூர் மடாலயமும் சென்னை நகரத்தார் சேம்பர் ஆஃப் காமர்சும் (என்.சி.சி) இணைந்து எவ்வாறு திறன் மேம்பாடு செய்யலாம் என்று ஆலோசித்து அதன் முதல் கட்டமாக என்.சி.சி லிருந்து நமது நாச்சியப்ப சுவாமிகள் பாலிடெக்னிக் கல்லூரி பார்வையிட்டு நம்மிடம் உள்ள அடிப்படை உள்கட்டமைப்பை அறிந்து கொண்டு அதன் அடிப்படையில் அவரவருக்கு தேவையான திறன் உள்ள மனித வளத்தை எவ்வாறு உருவாக்குவது என்ற அடுத்த கட்டத் திட்டத்திற்கு நகரும் நிலைக்கு வந்துள்ளோம்.

இன்னும் பல நிறுவனங்களோடும் நம் பாலிடெக்னிக் கல்லூரி தொடர்பில் உள்ளது விரைவில் சேலம் சோனா இன்ஜினியரிங் கல்லூரி மற்றும் மதுரை தியாகராஜர் இன்ஜினியரிங் கல்லூரி ஆகியோரிடமும் நமது ஆசிரியர்களை இந்த திறன் மேம்பாட்டுக்கு தயாரிக்கும் வகையில் (train the trainer) பயிற்சி அளிக்கும் எண்ணத்தை செயல்படுத்த முயற்சியை துவங்குவோம்.திறன் மிக்க கல்வியால் புத்துலகம் சிறக்கும்.

ஆன்மீகமும், திறன் கல்வியும், அறங்களும், நவீனத்துவமும் சிறந்து விளங்கும் நிலையில் நமது பணிகள் நடைபெற்று வருதற்கு நாச்சியப்ப சுவாமிகள் குருவருளும், காசி விசுவநாதர் திருவருளும் நமக்கு துணை நிற்பது பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது. அனைவருக்கும் விநாயகர் சதுர்த்தி வாழ்த்துகள்.

Koviloor Digital Library

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம் – 5

குமார தேவர் இயற்றிய மகாராஜா துறவு

கோவிலூர் மரபு வேதாந்த நூல்களில் எளிமையும் இனிமையும் வாய்ந்த நூல் குமாரத் தேவர் இயற்றிய ‘‘ மகாராஜா துறவு ’’ என்பதாகும். கன்னட நாட்டைச் சேர்ந்த குமாரத் தேவர், சாந்தலிங்க சுவாமிகளைத் தன் ஞான குருவாக ஏற்றவர். இவர் விருத்தாசலம் திருக்கோயிலைத் தன் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர். அக்கோயிலின் பெரிய நாயகி அவருக்குச் சிறுமி வடிவில் வந்து பால் அருந்தத் தந்து, ஆட்கொண்டு அத்தலத்திலேயே வாழும்படி கூறினாள். இவரின் சீடர் சிதம்பர சுவாமிகள் ஆவார். இவர் பல சித்துவேலைகள் செய்துள்ளார். இவர் பெரிய நாயகி அம்மை பதிகம், மற்றும் பதினான்கு தத்துவ நூல்களை இயற்றி உலகிற்கு அளித்தார். இவரின் நிறைவிடம் விருத்தாசலத்தில் உள்ளது.

- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

மகாராஜா துறவு என்ற இந்த நூல் துறவறத்தின் சிறப்பினைக் காட்டுவது. இதனோடு, சீவாத்மா பரமாத்மா ஐக்கியம் பற்றி அறிவிக்கின்றது. முற்பகுதியில் மகாராஜா துறவு ஏற்ற நிலையையும் அவர் ஞானம் பெற்ற நிலையையும் எடுத்துக்கூறி பிற்பகுதியில் அமைச்சன் ஒருவன்

Koviloor Digital Library

கேட்கும் வினாக்களுக்கு முன்னர் மகாராஜா என்ற நிலையில் இருந்து தற்போது அதில் இருந்து விடுபட்டு ஞானத்தைப் பெற்றவர் பதில் தருவதாக அமைந்துள்ளது.

வளம் மிகுந்த கர்நாடகத் தேசத்தில் அரச குடும்பத்தில் தோன்றிய அரசனுக்கும் அரசிக்கும் நெடுநாள் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்து பல அறங்கள் செய்திடத் தெய்வ அனுக்கிரகத்தால் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்து கல்வி பயின்று மணம் முடித்து வாழும் வேளையில் இவ்வுலக வாழ்வு துன்பங்களே நிறைந்தது என்பதை உணர்ந்து மெய்ப்பொருள் தேடி ஞானத்தைத் தேடித் தன் அரச பதவியைத் துறந்து காட்டில் திரிந்து, பிச்சை எடுத்து உண்டு பயணப்பட்டது. இந்த ஞானப் பயணத்தில் அவர் ஆன்மா வெற்றி பெற்று பந்தம் அறுத்து, அனைத்திலும் கடவுளைக் காணும் தன்மைபெற்று, தான் வேறு உலகம் வேறு என எண்ணாத நிலையில் ஒன்றாய் நன்றாய் விளங்கியது.

மன்னருக்கான அடையாளங்கள், அதிகாரங்கள் எல்லாம் துறந்து, காட்டில் அலைந்த அந்த ஆன்மாவிற்கு முனிவர் ஒருவர் குருவாக அமைந்தார். அவர் ‘‘ உலகம், உலகப் பொருள்களால் கிடைக்கும் இன்பம் ஆகிய இரண்டையும் எனக்கானவை, என்னுடையவை என்று எண்ணாமல் வாழ வேண்டும். இவை புறப்பற்றுக்கள் ஆகும். இவற்றால், இவற்றின்மீது ஏற்படும் ஆசைகளை விலக்க வேண்டும். மனம், புத்தி, சித்தம் , அகங்காரம் ஆகிய உட்கருவிகளைக் கட்டுப்படுத்தி, காம, குரோத, லோப, மோக, மதமாற்சரியம் ஆகியவற்றை அடக்கினால் வீடுபேறு கிடைக்கும்’’ என்று உபதேசித்தார்.

இதனைத் தனது வழியாகக் கொண்டு தனிமையிலிருந்து ஞானத்தை நோக்கில் அந்த ஆன்மா நடைபோட்டது. அவருக்குப் பசி வந்தபோது பல இல்லங்களில் பிச்சை எடுத்து பசியாறினார். ஓரிடத்தில் வசித்தால் அதனால் அவ்விடத்தின் மீது பற்று ஏற்படும் என்று இடங்களை மாற்றி மாற்றி வசித்து வந்தார். உலகில் தோன்றும் பொருள்கள் எல்லாம் ஆத்ம வடிவானவை என்று உணர்ந்தார். பொருள்கள் ஒவ்வொன்றும் பெயர், வடிவம் ஆகியவற்றால் மாற்றம் பெற்றுத் திகழ்ந்தாலும் அவற்றுக்குள் உள்பொருளாய் இருப்பது சச்சிதானந்தம் என்று அறிந்தார். எத்திசையிலும்


சற்குருப்பியா நமஃ.
ஸ்ரீ குமாரதேவ சுவாமிகள்
அருளிச்செய்த
மஹாராஜா துறவு மூலம்.

இது
சமீவனக்ஷேத்திரமென்னும்
ஸ்ரீ கோயிலூர்
முத்திராமலிங்க ஞானதேசிகர்
ஆதீனத்திற்குரிய

திருக்களாண்டவரென்னும்
ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர்
பாதசேகரரான
காசிவாசி
ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளால்
அச்சியற்றப் பெற்றது.

நூலின் இணைய இணைப்பு

எப்பொருளிலும் பரிபூரணமாக நிறைந்திருப்பது பிரம்ம சொரூபம் என்பதை அறிந்தார். பொன்னால் செய்யப்பெற்ற பொருள்கள் பல வடிவம் பெயர் பெற்றிருந்தாலும், அடிப்படையில் அவை தங்கத்தால் ஆனவை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படியே பிரம்மம் எங்கும் நிறைந்திருக்க வடிவம் ,பெயர்கள் மாறி உள்ளன என்பதை அறிந்து கொள்ளலாம்.

உலகினை வேறு அது ஆக உணர்ந்திடில் பந்தம் ஆகும்.

உலகினைத் தானே ஆக உணர்ந்திடில் முத்தி ஆகும்

உலகமும் உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் நானும் வேறு வேறல்ல என்பதே தெளிவாகும்.

உலகப் பொருள்கள் மீது பற்று, பாசம், பந்தம் வைத்துவிட்டால் அதிலிருந்து மீள இயலாது. அந்தப் பற்று பாசம் பந்தங்களை நீக்குவது பெரும் சாதனை, சோதனை. எனவே பற்று கொள்ளாலும் பற்று துறக்காமலும் வாழ்வதே இனிய வாழ்க்கை. துன்பமில்லாத வாழ்க்கை ஆகும். துன்பமே இல்லாத இன்ப வாழ்க்கை வாழ்வதே சிறப்பு. அதற்கு உலக பந்தம் அறுத்து மெய்ப்பொருள் உணர்ந்து எல்லாவற்றிலும் இறைவனை, தம்மைக் காண்பதே இன்ப வாழ்வாகும்.

இவ்வாறு குமாரத் தேவர் இன்ப வாழ்விற்கு இனியனவற்றை மகாராஜா துறவு நூலின் வழியாக எடுத்துரைக்கிறார்.

Koviloor Digital Library

அன்புடைத் தோன்றல் பகுதி–1

நில்லு கண்ணப்ப!

இரா. கலைக்கோவன்,
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
திருச்சிராப்பள்ளி

அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் இணைந்து போற்றும் மிகச் சில சிவநெறிச் செல்வர்களுள் உடுப்பூர்த் திண்ணனாரும் ஒருவர். பொத்தப்பி நாட்டு வேட்டுவக்குடியில் நாகனுக்கும் தத்தைக்கும் தவப்புதல்வராய்த் தோன்றிய திண்ணன் காளத்தி இறைவனால் கவர்ந்திழுக்கப்பட்டவர். கண்ணை எடுத்து அப்பியதால் கண்ணப்பர் என்று அந்தக் கடவுளாலேயே பெயரிடப்பட்டவர். இவர் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் 180 பாடல்களில் வடித்துள்ளது. இவருக்கென்றே, ‘திருக்கண்ணப்பதேவர் திருமறம்’ என்ற பெயரில் இரண்டு இலக்கியங்களை நக்கீரரும் கல்லாடரும் இயற்றியுள்ளனர்.

தமிழகக் கோயில்கள் பலவற்றில் கண்ணப்பர் சிற்பம் உண்டெனினும் அவரது வரலாற்றை விளக்குமாறு போல அமைந்த சிற்பத்தொடர்களை மிகச் சில கோயில்களிலேயே காணமுடிகிறது. அத்தகு வாழ்க்கை விளக்கத் தொடர்களுள் பழைமையானது தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் இராஜராஜன் திருவாயிலின் வடமுகத்தில் பதிவாகியுள்ளது.

இராஜராஜீசுவரப் பதிவுகள்

கண்ணப்பர் வாழ்க்கை இங்கு நான்கு கற்பலகைகளில் சிற்பச் செதுக்கல்களாய் இடம்பெற்றுள்ளது. முதற் காட்சியில் பத்தாம் நூற்றாண்டுச் சோழர் கால ஒருதளத் தூய நாகர விமானம் முகமண்டபத்துடன் படம்பிடிக்கப்பட்டுள்ளது. கோயிலின் தாங்குதளம் பாதபந்தமாய் அமைய, மேலே வேதிகைத்தொகுதி. மூன்று பத்திகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ள விமானத்தின் சாலைப்பத்தி நன்கு முன்னிழுக்கப்பட்டுள்ளது. பத்தி அணைவுத் தூண்கள் நான்முகமாக அமைய, சாலைப்பத்தியின் நடுவில் உள்ள கோட்டத்தைச் சட்டத்தலை பெற்ற சிறு நான்முகத் தூண்கள்

Koviloor Digital Library

தழுவியுள்ளன. கோட்டத்தின் நடுவில் இலிங்கத்திருமேனி. வடிவம் பெறாத தோரண வளைவு கோட்டத் தலைப்பாக, சுவர்த் தூண்களின் மீதுள்ள வெட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்குகின்றன. வாஜனம், வலபி, கூடுவளைவுகள் பெற்ற கபோதம், பூமிதேசம் ஆகிய கூரையுறுப்புகளை அடுத்து, வேதிகையின் மீது கிரீவமும் சிகரமும் உச்சிக்குடமும் அமைந்துள்ளன. தலைப்புகள் பெற்ற கிரீவகோட்டங்கள் வெறுமையாக உள்ளன. சாலைப்பத்தியின் முன்னிழுப்புப் போலவே கிரீவகோட்டமும் சற்றே முன்னிழுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறிய அளவினதாகக் காட்டப்பட்டுள்ள முகமண்டபம் விமானத்திற்கு உள்ளடங்கியதாய் அதே கட்டமைப்புப் பெற்று ஆனால், பத்திப் பிரிப்பற்றதாய் இருநான்முகத் தூண்களுக்கு இடைப்பட்ட சுவருடன் கோட்டமின்றிக் காணப்படுகிறது. முகமண்டபக் கூரையில் வாயிலைப் பார்த்தவாறு நந்தி அமர்ந்துள்ளது. முகமண்டப வாயிலில் இருந்து கீழிறங்கும் களிற்றுப்படி வரிசையின் துளைக்கைப் பிடிச்சுவர் சிறு தளமொன்றின் மீது இருத்தப்பட்டுள்ளது. மேற்படியில் ஓர் அடியவர் நிற்கிறார்.

மண்டபத்தின் முன் வலப்புறத்துள்ள பெருமரத்தின் கிளைகள் பிரியுமிடத்துள்ள பொந்தில் ஆந்தையும் அதற்குக் கீழுள்ள பகுதியில் மரப்பல்லியும் கிளைகளில் குரங்குகளும் காட்டப்பட்டுள்ளன. மண்டபத்திற்கு முன் பலித்தளம். அதற்கு முன் சமபாதத்தில் நின்றநிலையில் இடையில் தொடை மறைக்குமளவு தோலாடை அணிந்து செவிகளைப் பனை யோலைக் குண்டலங்கள் அலங்கரிக்க, கைகூப்பித் தொழுதநிலையில் இளமை பொலியக் காட்சிதரும் கண்ணப்பரின் தலையலங்காரம் வலப்புறம் முடித்த பெருங் கொண்டையாக உள்ளது. கோயிலின் பின்புறத்தே மற்றொரு மரம். இச்சிற்பத் தொகுதியை வானிருந்து போற்றுமாறு தனிப் பலகைகளில் வலப்புறத்தே சூரியனும் இடப்புறத்தே சந்திரனும் காட்டப் பட்டுள்ளனர்.

இச்சிற்பத்தின் கீழே

Koviloor Digital Library

இரண்டு காட்சிகள் அடுத்தடுத்த கற்பலகைகளில் படம்பிடிக்கப்பட்டுள்ளன.

முதற் பலகையில் வேட்டைக்குத் தயாராக நிற்கும் கண்ணப்பரின் தனித்த காட்சி. வலக்கையில் அம்பும் இடக்கையில் வில்லும் ஏறு நிகர்த்த பார்வையும் திரண்ட தோள்களும் கொண்டு, இடக்காலை முன்வைத்த நிலையில் தோற்றம் தரும் வேட்டுவராகக் கண்ணப்பரை இந்தச் சிற்பம் காட்சிப்படுத்துகிறது. முதற் சிற்பத்தில், தோலாடையை இடுப்போடு இருத்தும் பட்டை யில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வடிப்புக் கூர்மையின்றிக் காணப்படும் மணிகள், இந்த இரண்டாம் சிற்பத்தில் தெளிவாகவும் வரிசையாகவும் வடிக்கப்பட்டுள்ளன. மணிகள் பொருத்திய இடுப்புப் பட்டையாக அது மிளிர்கிறது.

மூன்றாம் சிற்பத்தில் நன்கு வளர்ந்து இலேசாக முன் சரிந்த மரத்தின் நிழலில் சதுர ஆவுடையாருடன் இலிங்கத்திருமேனி உச்சியில் பூச்சரங்கள் சுற்றிய நிலையில் காட்சிதர, அதன் முன்னால் கண்ணப்பர் நிற்க, அவர் பின்னே அவருடன் வேட்டைக்கு வந்த நாய் அமர்ந்துள்ளது.

கண்ணப்பரின் தோற்றத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களாக அவர் கழுத்தில் அணிந்திருக்கும் முத்துமாலையையும் இடுப்பு அரைப்பட்டிகையின் முடிச்சுத்தொங்கல்களையும் குறிப்பிடலாம். அம்பு, வில், வேட்டையில் அடித்த உடும்பு ஆகியவற்றை இரு கைகளாலும் இறுகப் பிடித்த நிலையில் மலர்ந்த

முகத்தோடு நிற்கும் கண்ணப்பரைக் காட்சிப்படுத்தும் இச்சிற்பம் முதலிரண்டு சிற்பங்களினும் வடிப்புக் கூர்மை பெற்றுள்ளது. இரண்டாம் மூன்றாம் சிற்பங்களின் கீழே உறுமியவாறு ஓடும் நிலையில் நான்கு நாய்கள் காட்டப்பட்டுள்ளன.

இம்மூன்று சிற்பங்களும் இரு நான்முக அரைத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவரில் அமைய, நான்காம் சிற்பம் சற்றுத் தள்ளிய நிலையில் வடசுவர், கைப்பிடிச்சுவராக

Koviloor Digital Library



மாறுமிடத்தில் அமைந்துள்ளது. கண்ணப்பர் வரலாற்றின் உச்சக்காட்சியை முன்னிருத்தும் இச்சிற்பம் சற்றே சிதைந்துள்ளது. சிவலிங்கத்தின் முன் கருடாசனத்தில் அமர்ந்திருக்கும் கண்ணப்பரின் முகம் இலேசான இடச்சாய்வில் சற்றே குனிந்துள்ளது. இடக் கண்ணை அகழும் நிலையில் அம்பைப் பிடித்த இடக்கை அமைய, வலக்கை அகழப்பட்ட கண்ணை ஏந்த மேலுயர்த்தப்பட்டுள்ளது. கழுத்தணி சவடியாக மாறியமைய, இடுப்பின் வலப்புறம் குத்துவாள் செருகப்பட்டுள்ளது.

கண்ணப்பரின் கண்ணகழ்வைத் தடுக்குமாறு முன்னுள்ள இலிங்கத்திலிருந்து கையொன்று வெளிப்பட்டுள்ளது. மரத்தின் பின்னால், மறைந்த நிலையில், வலக்கையைப் போற்றிநிலையில் கொண்டுள்ள ஒரு மனிதரைக் காணமுடிகிறது. இச்சிற்பத்தின் கீழுள்ள பகுதியிலும் நான்கு நாய்கள் உறுமும் நிலையில் இரண்டிரண்டாகக் காட்டப்பட்டுள்ளன. முதல் தொகுதி நாய்களுள் இரண்டாவது தலையைத் திருப்பிப் பின்னுள்ள நாய்களைப் பார்க்கிறது.

நான்கு சிற்பங்களைக் கொண்ட இத்தொகுதியின் எந்த ஒரு காட்சியும் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராண அடிகளுடன் ஒத்திசையவில்லை. உடுப்பூர் வேடுவர் இனத்துக்குத் தலைமையேற்ற உடனோ, வேட்டைக்குப் புறப்பட்ட நிலையிலோ, திருக்காளத்தி மலையை அடையும்போதோ, கண்ணப்பர் திருக்கோயில் வழிபாடு செய்ததாகச் சேக்கிழார் கண்காட்டவில்லை. ஆனால், சிற்பத்தொகுதியின் முதல் காட்சியே கண்ணப்பரின் கோயில் வழிபாட்டுடன்தான் தொடங்குகிறது. காளத்தி நிகழ்வுகளே கண்ணப்பர் கதையை நகர்த்துவதால் இச்சிற்பத்தில் உள்ள கோயிலை முதலாம் இராஜராஜர் காலத்தே மலையடிவாரத்திருந்த காளத்திக் கோயிலின் படப்பிடிப்பாகக் கொள்ள முடியும்.

(தொடரும்)

Koviloor Digital Library

(திருவிளையாடற் புராணம் தொடர்)

ஆடலுக்கு ஆட்படுவோம்

திருநகரப் படலம்

பகுதி-7

காசி ஸ்ரீ முனைவர்
நா.ரா.கி.காளைராசன்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)

உலக உயிர்களுக்கெல்லாம் தாயானவள் அன்னை மீனாட்சி. இதனால் அன்னை ஆட்சி செய்த பாண்டிய நாடே உலக உயிர்களுக்கெல்லாம் தாய்நாடு ஆனது. அவள் பேசிய தமிழ்மொழியே தாய் மொழி ஆனது. பாண்டிய நாட்டையும் அதில் ஓடுகின்ற நதிகளையும் பெண்ணாகவே கருதிப் பெயர்வைத்துத் தமிழ்மரபு காத்தனர் நம் முன்னோர். பாண்டிநாடாகிய பெண்ணுக்குப் புறத்திலிருக்கும் நகரங்களெல்லாம் அவளுடைய அணிகலன்கள் போல் விளங்குகின்றன. பாண்டிய நாட்டின் சிறப்புகளைக் கடந்த மாத இதழில் கண்டோம். இப்போது, பாண்டிய நாட்டின் திருமுகம் போன்று விளங்குகின்ற அதன் தலைநகராகிய மதுரை மாநகரின் வளப்பத்தைப் பரஞ்சோதி முனிவரின் சொற்கள் வழியாகக் காண்போம்.

“மங்கலம்புனை பாண்டி நாடாகிய மகட்குச் ஞ்.” என்று தொடங்கும் 92 ஆவது பாடல் தொடங்கி, “அன்னவன் ஆணையால் தான் நடப்பது இவ் அகிலம் என்றால், முன்னவன் செய்த ஆடல் வரவினை முறையிற் சொல்வேன்” என்று முடியும் 200 ஆவது பாடல் முடிய உள்ள 109 பாடல்களில் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரைத் திருத்தலத்தின் சிறப்புகளைப் பரஞ் சோதி முனிவர் புகழ்ந்து பாடியுள்ளார். “மூன்றில் ஒருபங்காகச் சுருக்கி வரைக“ என்பது போல், பரஞ்

Koviloor Digital Library

சோதி முனிவர் 109 பாடல்களில் பாடியுள்ளதை இருபதில் ஒரு பாகமாகச் சுருக்கிச் சொல்லியுள்ளேன். அன்பர்கள் மூலப்பாடல்களைப் படித்து இறைவனது அளப்பெருங் கருணைக்கு ஆட்படுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இந்த மதுரையானது திருமகளுக்கு ஒரு செந்தாமரைக் கோயிலாகவும், திருமால் கோயிலாகவும், மருமகளான சரஸ்வதிக்கு வெண் தாமரைப் பீடமாகவும், பூமிதேவிக்கு நெற்றியிலிட்ட திலகமாகவும் விளங்குகின்றது. தெய்வங்கள் குடி கொண்டுள்ள மதுரையைச் சுற்றிலும் அகழியும், அதையடுத்து கோட்டையும், கோட்டையின் உள்ளே பல்வேறு வீதிகளும், வீதிகளிலே உயர்ந்து நிற்கின்ற மாடமாளிகைகளும் உள்ளன. மதுரையைச் சூழ்ந்த குளிர்ந்த வயல்களிலே நெற்பயிர்களும், நீண்ட கரும்புகளும் தென்னை மரங்களும், மலர்கள் நிறைந்த சோலைகளும் நிறைந்துள்ளன.

மதுரைக் கோட்டையும் அகழியும் மதுரைக்கு வெளியே, ஏழுகடல்களும் வந்து சூழ்ந்தது போன்று மதுரையை அகழி சூழ்ந்து இருந்தது. அதில் ஆமைகளும் மீன்களும் முதலைகளும் நிறைந்து இருந்தன. மதுரையைச் சுற்றியுள்ள விண் உயர்ந்த கோட்டை மதிலை மூடிக்கொண்டு மேகங்கள் தவழ்கின்றன. அருள்மிகு சோமசுந்தரேசுவரரின் கையில் கங்கணமாக அணியப் பெற்றிருந்த பாம்புதான் இந்தக் காவற் கோட்டை மதிலாக என்பது உறுதி. அகழியைக் கடந்து எதிரிகள் கோட்டைச் சுவரைச் சூழ்ந்தால், சூழ்ந்தவர்களை அந்தக் கோட்டை மதிலில் வைக்கப்பட்டிருந்த சூத்திரப் பாவைகள் தாக்குகின்றன. இந்தச் சூத்திரப் பாவைகள் என்ற இயந்திரங்களின் வீரத்தைக் கொஞ்சம் சொல்லுகின்றோம். சில பொறிகள் மழுக்களை எறிகின்றன, சில கூரிய வாள்சளை வீசுகின்றன,

Koviloor Digital Library

சில விஷம் தோய்த்த சூலங்களை வீசுகின்றன, சில கைவேல்களை வீசுகின்றன, சில நெருப்புச் சக்கரங்களை வீசுகின்றன, சில எமனுடைய பாசக் கயிற்றைப் போன்று

வலிய கயிறுகளை வீசுகின்றன, சில கற்களைக் கவணில் வைத்து வீசுகின்றன, விஷத்தைக் கக்குகின்ற பாம்புப் பொறிகள் நாக்கை நீட்டிக் கடிக்கின்றன, மலைப்பாம்புப் பொறிகள் எதிரிகளை வளைத்து உண்கின்றன, யானைப் பொறியானது கொடிதாகிய இருப்பு உலக்கையை வீசி எதிரே வருகின்றவர்களின் தலைகளை உடைக்கின்றன, அதிக வேகத்துடன் புலிப்பொறி தாவிச் சென்று எதிரியை அமுக்கும், பொம்மை என்று எண்ணித் தன் மீது ஏறுகின்றவர்களைக் குதிரைப் பொறியானது மார்பு ஒடிய உதைத்துப் பள்ளமாகிய அகழியில் விழும் படியாகத் தள்ளி விடும், கொள்ளிவாய்ப் பிசாசுகள் போன்று சில பொம்மைகள் தலைகீழாகத் துள்ளியாடுகின்றன, சில பேய்கள் போன்று கைகள் கொட்டுகின்றன, சில கூளிகள் தோள்களைத் தட்டுகின்றன, சில பகைவர் தலைகளைத் திருகிக் கற்களை உருட்டி விடுவது போன்று உருட்டிவிட்டுக் கொல்லும், சில பகைவர்கள் மீது சுடுமணலைக் கொட்டும், சில ஈயத்தை உருக்கி மழைபோல் பொழியும், சில இரும்பு வட்டுக்களை வீசும், சில உருக்கு வட்டுக்களை வீசும், சில உருண்டோடுகின்ற தேரிலிருந்து அம்புகளை மழைபோல் பொழியும். தேவதச்சனால் செய்யப்பட்டவை போன்று மதுரைச் சிற்பிகள் இவ்வாறான சூத்திரப்பாவைகள் என்ற இயந்திரப் பொறிகள் பலவற்றைச் செய்து கோட்டையில் பொருத்தி வைத்து இருந்தனர். இத்தனை பொறிகளை வென்றாலும் பாண்டியர்களின் வீரர்களை வெல்வது அரிதாகும்.

தமிழ் வேதத்தைத் தெரிந்து வைதிக நிலையுடனே சைவசமய நிலையையும் நிலை பெறச் செய்யும் அமுதம் போன்று வெள்ளை அலைகளையுடைய வைகையாறும் அந்த மதுரைக்கு ஒருபக்கத்து அழகாய் ஓடுகின்றது.

அன்னியர் ஆட்சியில் அழிக்கப்பட்ட மதுரையின் அகழியும் கோட்டையும்

மதுரைச் சுற்றியிருந்த சுமார் 33.6 மீட்டர் அகலமும் 5.42 கிலோ மீட்டர் சுற்றளவுள்ள கோட்டையும் அகழியும் அன்னிய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்டன. கி.பி.1843 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கோட்டைச் சுவர்கள் இடிக்கப்பட்டு

Koviloor Digital Library

அகழி மூடப்பட்டது. கோட்டையை இடித்த இடம் அந்த இடத்தை இடித்தவர்களுக்கு வழங்கப்பட்டது. அகழி மூடப்பட்டு வெளிவீதிகள் ஆனது.

கோட்டையை இடிக்க உத்தரவிட்ட மாவட்ட ஆட்சியர் பிளாக் பர்ன், துணைநிலை ஆய்வாளர் மாரட், உதவிய பெருமாள்பிள்ளை இவர்கள் பெயரில் வீதிகள் அமைக்கப்பட்டன. (**https://ta.wikipedia.org/wiki/** மதுரை_வரலாறு). இவர்கள் இடித்தது போக, எஞ்சி இருப்பது சுமார் 50அடி அகலம் கொண்ட ஒரு சிறு பகுதி மட்டுமே ஆகும். மதுரை மத்திய பேருந்து நிலையம் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு எதிரே இப்போது இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடமாக உள்ளது. கோட்டையின் எஞ்சிய மிகச் சிறுபகுதி புதுப்பிக்கப்பெற்று நினைவுச் சின்னமாக உள்ளது. உலகமகா அதிசயங்களில் ஒன்றாகப் பேசப்படும் சீனப்பெருஞ்சுவர் ஓர் நீண்ட சுவர் மட்டுமே ஆகும். ஆனால் வங்கியசேகரபாண்டியன் கட்டிய இந்தக் கோட்டையில் போரிடும் சூத்திரப் பாவைகள் என்ற பெயரில் இயந்திரப் பொம்மைகள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழரின் இந்தப் புராதனச் சின்னம் பாதுகாக்கப்பட்டிருந்தால் இன்று உலக அதிசயங்களில் ஒன்றாக மதுரையின் அகழியும் கோட்டையும் இடம் பெற்றிருக்கும் என்று உறுதிப்படச் சொல்லலாம்.

மதுரை வீதிகளினுடைய சிறப்புகள்

திருவிழாக்கள்

நீங்காதிருக்கிற வீதிகளில் கரும்புகளும், மாலைகளும், கதம்பப்பொடிகளும், காந்தி பொருத்திய ரத்தினாபரணங்களும், குண்டலங்களும், சாம்பிராணிப் புகைகளும், கர்ப்பூர தீபங்களும், பூரணக் கலசங்களும் கொண்டு தெருக்களும் வீடுகளும் அழகுபடுத்தப்பட்டிருந்தன. சந்திரகாந்தக் கல்லாலேயும், பளிங்குக் கல்லாலேயும் கட்டப்பெற்ற மாளிகைகள் வரிசையாக இருக்கின்றன. உப்பரிகைகள்

Koviloor Digital Library

அதில் உள்ளன. மாணிக்கமும் வளையலும் விற்றுத் திரிந்தவருடைய மெய்யான வேதவடிவமான பாதமலர்களைச் சுமக்கும்படி தவஞ் செய்துள்ள வீதிகள் அவைகள். அந்த வீதிகளின் பெருமைகள் அனைத்தையும் என்னுடைய சொல்லினால் அளவிடுதலாகுமோ?

வீதிகளின் ஓசைகள் தேர்களின் ஒலியும், கடிவாளத்துடனே பாய்கின்ற குதிரைகளின் ஒலியும், குதிரைகளுக்குப் பூட்டப்பட்ட 'கிண்கிணி' மாலைகளின் ஒலியும், தோற்கருவி துளைக்கருவி, நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவிகளை இசைக்கும் ஒலியும், நீண்டு பருத்த துதிக்கைகளை உடைய யானைகளின் ஒலியும், இன்னம் எல்லா ஒலிகளும் மதுரையில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. இதனால் மதுரையில் எக்காலமும் மேகங்கள் இடி முழங்கினாலும் அந்த இடியோசை மதுரை மக்களின் காதுகளில் விழாது.

பரத்தையர் வீதி

சாதிபேதம் பார்க்காமல், வயதில் மூத்தவர் இளையவர் என்ற பேதம் பார்க்காமல் தங்கள் கண் வலைக்கு ஆட்படுத்துபவர்கள் பரத்தையர். மன்மதனுடைய இரகசியங்களை ஒழுங்காக நன்றாய்ச் சுவர்களிலே சித்திரங்களாக எழுதிவைத்து, பலரும் அவற்றைப் பார்த்து வியக்கச் செய்வர். தீராத வியாதி கொண்டோரையும் தீண்டிப் பொருள் கொள்வர் பரத்தையர், சூதாடி வென்ற காமுகர் கையிலுள்ள பொருள்களைக் இவர்கள் கைக் கொள்ளுவார்கள். ஆகாயத்திலே விளங்குகின்ற சந்திரனைத் தொடும்படியான வெண்மையான நிலாமுற்றத்திலே குளிர்ந்த பனிநீரிலே தோய்த்த மல்லிகை மாலைகளைத் தொங்க கட்டியிருக்கிற தூங்கு மஞ் சத்தின் மேலே தூங்க வைப்பார்கள். மன்மதனும் ஆசைகொண்டு வரும்படி பலவிதமான இராகங்களைப் பாடி தமிழ்ப் பாடல்களை வெகுமானமாகக் கொள்ளுவார்கள். எல்லாப் பற்றுகளையும் அறவே யொழித்த துறவிகளும் விரும்பும்படியாக, சுகத்தை விற்கிற அழகு பொருத்திய பரத்தைகள் நிறைந்த வீதி இது.

வேளார் வீதி

செல்வராகிய வேளாளர்களுடைய அழகிய வீதிகளை இனி சொல்லுகிறோம். வரும் விருத்தை எதிர்கொண்டு உபசார வார்த்தைகள் சொல்லுகிற சத்தமும், பின்பு அறுசுவை உண்டியும் உண்ணச் சொல்லி மகிழ்ச்சியான

சொற்களைச் சொல்லுகிற சத்தமும், மதுரையின் திரவியங்களைக் கொடுக்கும் சத்தமும் நிறைந்த வீதி இது. வீடுபேற்றை விரும்புகின்ற ஞானமும், குறையாத நன்மையும், அன்புடமையும், ஒப்புரவும், இவைகளைத் தவஞ் செய்து பெற்றவர்கள் வாழும் வீதி இது.

செட்டித் தெரு

ஒருவர் வந்து ஒரு பொருளை வாங்கக் கேட்டால், அந்தப் பொருள் கைவசம் இல்லையாயின், அதற்குப் பதிலாகத் தன்னிடம் உள்ள மற்றொரு பொருளைச் சொல்லிக் கொடுத்தலிலும், பேசும் பேச்சிலும் இலாபங் கொள்ளவல்ல வணிகர் இருக்கும் வீதி இது. அந்தச் செட்டித்தெருவில் கடலளவு திரவியங்களும், நாட்டின் அளவு திரவியங்களும், அளவில்லாத பசுக்களும் நிரம்பி யிருக்கின்றன. பவள மாலைகளும், பொன்னரி மாலைகளும், பருத்த முத்து மாலைகளும், ரத்தின மாலைகளும், பசுமையான மரகதமாலைகளும், இந்திர வில்லின் நிறப் பிரிவுபோல் விரிவாகத் தொங்க விடப்பட்டிருந்தன. பெரிதான விலைகொண்ட பொருள்களும், பதினேழு நிலத்து வர்த்தகர் தங்குகின்ற வீடுகளும் அங்கிருக்கின்றன. செம்பொன்னாலே கெட்டியான நிலைக் கதவும், வைரத்தினாலே தாட்பாளும் பொருந்தி இருக்கிறது என்று சொன்னால், அந்தச் செட்டிகளுடைய செல்வத்தின் வளமையை இப்படிப்பட்டதென்று

அளவு செய்து எப்படிச் சொல்ல முடியும்? அந்தச்செட்டித்தெருவானது இந்திரனின் அளகாபுரியின் பொலிவுக்கு ஒப்பாயிருக்கும்.

அரசர்களுடைய பெரிதான வீதிகள்

யானை குதிரை லாயங்கள் அனேகம். மழுக்கள் வச்சிராயுதம் வில் அம்பு முத்தலைச் சூலங்கள் சக்கரம்

Koviloor Digital Library

வேல் கலப்பை தடிகள் கத்திகள் கேடயம் தண்டாயுதம் முதலான ஆயுத்தக் கூட்டங்களுடனே வீரலட்சுமியானவள் வாசஞ் செய்கிற சிலம்பக்கூடங்கள் அனேகம். மல்யுத்தங்கள் செய்தும், தங்கள் கத்திகளுடனே கேடயங்கள் வீசியும், வெற்றிகொண்ட குமாரர்கள் பழகுஞ் சண்டைகள் செய்கிற கூடங்கள் அனேகம். நீலமணி மாடங்களும், சிவந்த மணிகளாற் செய்த சிகரங்களையுடைய வீடுகளும், பொன்னாலாகிய மாடங்களும், சந்திரகாந்த மாடங்களும், இப்படி விளங்குகின்ற மாடங்களின் நீண்ட வரிசைகளில் அளவில்லாத வித்தைகள் பயின்றிருக்கிற வீரர் கூட்டம் நிறைந்து காணப்படுகிறது. ஆட்டுச் சண்டை, சேவற்ச் சண்டை என வெவ்வேறுவிதமான சண்டைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டு கூட்டம் கூட்டமாகக் கூடி நிற்பார்கள். அந்தப் பெரிய மதுரை நகரின் வடகீழ்திசையில், முடிமேல் வேப்பம்பூ வாசம் வீச, தேன் சிந்துகின்ற ஆத்திமாலையும், பனைமாலையும் மடிமேல் வீசப் பாண்டியர்கள் பாரம்பரியமாக அரசாட்சி செய்கிற, இடிபோலும் ஒலிக்கின்ற முகவா யிலையுடைய எழு நிலைமாடக் கோயில் இருக்கின்றது.

வேதியர் வீதி

தாமரைமலர் மாலை குடுமியிலே தொங்கி அசைய, பஞ்சு நூலால் செய்த முப்புரியை மார்பில் அணிந்து கொண்டு, நான்கு வேதங்களையும் குறைவில்லாமல் கற்றவர்களின் வீடுகளில் வேள்விகள் செய்து கொண்டுள்ளனர். பிராமணர்களுடைய சிறு பிள்ளைகள் தெய்வ வேதத்தை நாவிலே சொல்லிப் பழகிக் கொண்டிருக்கின்றனர். வேதங்களும் தரும சாஸ்திரங்களும் புராணபேதங்களும் தெரித்த பிராமணர்கள் நிறைந்த வீதி இது. பிற மதங்களை வெல்வதற்கான வாதமும், பிறர் மதத்தை மறுத்தலும், தன் மதத்தை நிலைநிறுத்தவல்ல ஞானமும் உடையவர்கள் இவர்கள். அடுப்பில் உண்டாகிற புகையும், அகிற்கட்டைகளின் புகையும், யாகசாலைகளிலே உண்டாகிக் கிளம்புகிற புகையும் ஒன்றாய்க்கூடிச் சூரியனுடைய பிரகாசத்தை மறைக்கின்றன.

மடங்களையுடைய வீதி

சம்சாரச் சாகரத்தைக் கடந்து பரமேசுவரனுடைய பாதமலரைச் சேருகின்ற சைவர்கள் சிவவடிவைத் தியானித்துபடியே நிறைந்துள்ளனர். எவ்விடங்களிலும் பூசை செய்து, சிவாகமங்களைக் கேட்டு, ஆகாமியங்களைத் தடைசெய்வார்கள்.

Koviloor Digital Library

அழிவில்லாத கடவுள் சொன்ன ஆகமங்களில் சிறந்த ஆசிரியர்கள் பலருண்டு. அவர்கள் ஆகமங்கை மாணவர்களுக்குக் கற்பிக்கின்றனர். வேதங்கள் ஆகமங்கள் கற்ற சிவயோகிகள் கூட்டங்களும் அனேகம். புல்லாங்குழலின் இசையும், தும்புரு நாரதர் பாட்டிசையும், ஆடிச் சுழலுகின்ற பெண்களின் ஒலியும், தமிழ் வேதமாகிய, தேவாரங்களின் ஒலியும், திருவிழாக்களின் ஒலியும், வேதங்களின் ஒலியும், திக்குகளெல்லாம் பெரு முழக்கம் செய்யும் பேரிகை ஒலியும், ஓயாமல் ஒலித்துக் கொண்டோ உள்ளன.

மேகங்கள் உலாவுகின்ற உயர்த்த மதிலும், விண்ணிலிருந்து இறங்கிப் பொன்மலை போன்று விளங்குகின்ற இந்திரவிமானமும் கொண்டது மதுரை. மீன்போன்ற கண்களை உடையவளது நாயகனை மூன்றுகாலமும் வணங்கியும், வேதங்களால் அறியப்படாதவன் செய்த திருவிளையாடல்களைக் கேட்டும், தியானித்தும் அடியார் பூசை செய்து கொண்டிருக்கின்றனர். தனக்கு ஓர் ஒப்பும் உயர்வும் இல்லாத கடவுளே சுந்தரபாண்டியனாக இந்த மதுரையில் இருந்து அரசாண்டான். இனி அந்தக் கடவுள் விளையாடின திருவிளையாடல்களை வரிசையாகத் தொடர்ந்து காண்போம்.

நாலடியார் பாடல்கள்

கடவுள் வாழ்த்து

வான்இடு வில்லின் வரவறியா வாய்மையால்
கால்நிலம் தோயாக் கடவுளை யாம்நிலம்
சென்னி யுறவணங்கிச் சேர்தும்எம் உள்ளத்து
முன்னி யவைமுடிக என்று.

விளக்கம்:

வானிலே தோன்றும் வானவில்லின் தோற்றமும் மறைவும் அறிதற்காது; அதுபோலவே, பிறப்பு இறப்பு கியவற்றின் இயல்புகளை அறிதலும் அரிதாம். இது உண்மையாதலால், பாதம் பூமியில் படியாத (பூ மேல் நடந்த) அருகக் கடவுளை, ‘எமது மனத்திலே நினைத்தவை நிறைவேற வேண்டும்‘ என்று பக்தியுடன் தரையில் தலை பொருந்துமாறு தாழ்ந்து பணிந்து தொழுவோமாக! (வானவில் இன்னவாறு தோன்றும் என்பதனை யாரும் அறியார். அதுபோலவே வாழ்க்கையில் துன்பங்கள் இன்னவாறு தோன்றும் என்பதனையும் யாராலும் அறிய இயலாது. இந்த உடம்பு எப்போது அழியும் என்பதும் அறிதற்கு அரிது. ஆயின் அழிவு உறுதி. அப்படி அது அழிவதற்குள் நல்ல செயல்கள் கைகூடும்படி கடவுளைத் தொழுவோம் என்பது கருத்து)

Koviloor Digital Library

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம் - பாடல் 28

- வாகீச கலாநிதி
கி.வா. ஜகந்நாதன்

எங்கும் பாம்பு

“பாம்பை நீ பூண வேண்டாம்; வேறு ஏதேனும் பொன்னாரத்தைப் பூண்பாயாக!” என்று தாயன்பினால் இறைவனைப் பார்த்துப் பேசிய காரைக்கால் அம்மையார், இப்போது எம்பெருமானைக் கூர்ந்து நோக்குகிறார். ஆரம் மட்டுமா பாம்பு? இறைவனுடைய திருமேனியில் எங்கே பார்த்தாலும் பாம்பு, எத்தனை வகையாகப் பாம்புகளை அவன் பயன்படுத்தியிருக்கிறான்! பார்க்கிறவர்களுக்கே குலை நடுங்குகிறது. எப்படி இவற்றை அணிந்து கொண்டிருக்கிறான்? ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டால்? ஐயோ! அதை நினைக்கவே பயமாக இருக்கிறதே! அவனுக்கு உண்டாகும் ஆபத்துக் கிடக்கட்டும். அவனிடம அன்பு வைத்து அவனுடைய திருவருளுக்காக ஏங்கி நிற்கும் பக்தர்கள் காணச் சகிப்பார்களா? அவர்கள் கற்பனையில் கூட ஆபத்தை எண்ண மாட்டார்கள். ஆனால், இதோ கண்கூடாக அவன் நஞ்சு மிகுந்த பாம்புகளையல்லவா அணிந்திருக்கிறான்?

“இதைப் பார்த்த எனக்கே மனம் தடுமாறுகிறதே! எதற்காக இவர் இப்படியெல்லாம் பாம்பை அணிந்திருக்கிறார்? எனக்கு இதைப் பார்க்கிறபோது ஏதோ ஒரு விதமாக வருகிறதே; எனக்கு என்ன நிலை உண்டாக வேண்டும் என்று உளம் கொண்டு இவர் இவற்றை அணிந்திருக்கிறார்? ஐயோ! இதைக் கண்ட எனக்கு என்ன ஆகுமோ, தெரியவில்லையே!” என்று உணர்ச்சி வசப்பட்டு அங்கலாய்க்கிறார்

Koviloor Digital Library



பூணாக ஒன்று புனைந்து.

அது மட்டுமா? சற்றே கண்ணைத் தாழ்த்திப் பார்த்தால் அவன் இடையிலே ஒரு நாகம் தெரிகிறது. அவன் தன் இடையிலே புலித்தோலை உடுத்தியிருக்கிறான். ஆடுகின்ற அழகனாகிய அவன் அந்த உடை நழுவாமல் அதன் மேல் கச்சை கட்டியிருக்கிறான். அந்தப் புலித்தோலை இறுகப் பிணித்து நழுவாமல் செய்யும் கயிற்றைப் போலே ஒரு நாகப்பாம்பை கட்டியிருக்கிறான். சில செல்வர்கள் ஆடையின்மேல் தங்க அரைஞாணைப் பூட்டியிருப்பார்கள். இந்தச் செல்வன் மாணிக்கத்தை

காரைக்கால் அம்மையார்.

இறைவன் பாம்பை எப்படியெல்லாம் பூண்டிருக்கிறான்? ஒரு பாம்பை மார்பில் பூறாகப் புனைந்திருக்கிறான். முதலில் நம் கண்ணுக்குப் பளிச்சென்று அது படுகிறது. கழுத்தைச் சுற்றிக் கொண்டு மார்பிலே மாலை புரளுவது போலப் புரண்டு கொண்டிருக்கிறது அந்தப் பொல்லாத பாம்பு.

உடைய அரைஞாணென்றோ என்னவோ, பாம்பைக் கட்டியிருக்கிறான்.

ஒன்று பொங்கு அதனின்

நாணாக மேல்மிளிர நன்கு அமைத்து

இந்த அரைஞாணாகிய பாம்பு பளபளக்கிறது. அதை நன்றாக இறுக்கிக் கட்டிக் கொண்டிருக்கிறான்.

இந்த இரண்டும் போதா என்று பின்னும் ஒன்றைப் புனைந்திருக்கிறான்.

Koviloor Digital Library

இடையிலே பாம்பு; மார்பிலே பாம்பு; தலைமேலும் பாம்பு! அவன் தன்னுடைய சடை முடியின் மேலும் பாம்பை அணிந்திருக்கிறான். அந்த முடி பொன் போலப் பளபளக்கிறது. சடையையே பொன்முடி போல வைத்திருக்கிறான். அந்த அழகிய முடிமேலே இந்தக் கொலைகாரப் பாம்பையல்லவா சூடிக் கொண்டிருக்கிறான்? கீழே, இடையே, மேலே எங்கும் பாம்பு; எல்லாப் பாம்புகளும் கொலை புரியும் நாகங்கள்; கொடிய நஞ்சையுடைய பாம்புகள்.

கோள்நாகம்

பொன்முடிமேல் சூடுவதும்.

இந்தக் கோலத்தைக் காணும்போது அம்மையாருக்குப் பகீர் என்கிறது. இவ்வளவு பெரிய பெருமான் இவற்றையெல்லாம் ஏன் பூணுகிறார்? என் அறிவுக்கு ஒன்றும் புலப்படவில்லையே! இன்னும் இதைப் பார்த்துக்கொண்டே இருந்தால் எனக்கு என்ன ஆகுமோ, தெரியாது. எதற்காக இப்படி யெல்லாம் செய்கிறார்?' என்று புலம்புகிறார் காரைக்கால் அம்மையார்.

எல்லாம் பொறியிலியேற்கு

என்முடிவ தாக?

தாருகாவனத்து முனிவர்கள் இறைவன் மேற் கோபம் கொண்டு யாகஞ் செய்து பலவற்றை வருவித்து அவனை அழித்து வரும்படி விட்டார்கள். புலி ஒன்றை உண்டாக்கிச் சிவனைக் கொன்று வா என்று அனுப்பினார்கள். இறைவன் அதனை அழித்து அதன் தோலை ஆடையாக அணிந்துகொண்டான். ஆணவமுடையவர்களின் முயற்சிகள் பயன்படா என்பதை உலகுக்குக் காட்டுவதற்காக அந்தத் தோலை இடையில் உடுத்துக் கொண்டான். பிறகு பாம்புகளை விட்டார்கள். அவை மிகவும் கொடிய நஞ்சையுடையவை. அவற்றை இறைவன் கொல்லவில்லை. எல்லாவற்றையும் பற்றி, அணிகலன்களைப் போல அணிந்து கொண்டான். பிறருக்குத் துன்பம் தருகிற பாம்புகள் இறைவனுக்கு ஆபரணங்களாயின. அவனுடைய கருணை, பாம்புகளையும் நல்லவைகளாக ஆக்கிவிட்டது.

அந்தப் பாம்புகளைக் கண்டு அஞ்சிப் பேசுவது போல அம்மையார் பாடுகிறார். அவற்றால் இறைவனுக்கு ஒரு தீங்கும் நேராது என்பதை அறிந்தவர் அம்மையார். என்றாலும் ஒரு கணம் அஞ்சுபவரைப் போல இருக்கிறார்.

அப்போது இந்தப் பாடலைப் பாடுகிறார். பக்தி விசித்திரங்களில் ஒன்று இது. தாயன்புக்கு இப்படியெல்லாம் தோன்றும். அன்பு அதிகமாகி விட்டால் அறிவு சற்றே ஒளிந்து கொள்ளும்.

'அறிவு இல்லாமல் இறைவனுக்கு ஆபத்து வந்து விடுமே என்று அஞ்சலாமா?' என்று கேட்கலாம். அன்பும் உணர்ச்சியும் மீதூரும்போது ஆராய்ந்து பார்க்கும் அறிவு

Koviloor Digital Library

தலைப்படாது இத்தகைய இடங்களில் நாம், அறிவின்மை வெளிப்பட்டதாக எண்ணக் கூடாது. அன்பின் விசித்திரம் இது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 'ஆனையைக் கெடுத்தவன் பானையிலும் தேடுவான்' என்பது ஒரு பழமொழி. ஆனை பானைக்குள் நுழையாது என்பதை அவன் அறிந்தவன்தான் என்றாலும் ஆனையை இழந்த துயரம் அறிவை மறைத்து விடுகிறது. பக்தி உணர்ச்சியிலும் இப்படிப் பல நிலைகள் உண்டு. அங்கெல்லாம் பக்தியின் அற்புத நிலைகளைப் பார்த்து நாம் வியக்க வேண்டும். அப்படி வியக்கும் பாடல்களில் ஒன்று இது.

பூணாக ஒன்று புனைந்து ஒன்று பொங்கு அதனின்

தாணாக மேல்மிளிர நன்கு அமைத்துக்ஷெகோள் நாகம்

பொன்முடிமேல் சூடுவதும் எல்லாம் பொறியிலியேற்கு

என்முடிவ தாக இவர்?

இவற்றைக் கண்ட எனக்கு என்ன ஆபத்து வரப்போகிறதோ தெரியவில்லை என்று கவலையுறுகிறார். கண்ட எனக்கே இப்படியானால், பூணாகக் கொண்ட இவருக்கு என்ன ஆகும் என்பது குறிப்பு.

இது அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதியில் 28ஆம் பாட்டு.

நல்வழி பாடல்கள்

பாடல் 40

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்

மூவர் தமிழும் முனிமொழியும் ஞ்ஜ கோவை

திருவா சகமும் திருமூலர் சொல்லும்

ஒருவா சகமென் றுணர்.

விளக்கம்:

தெய்வப் புலவர் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளும்,

நான்கு வேதத்தின் முடிவும், அப்பர், சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய மூவர் பாடிய தேவாரமும், மாணிக்க வாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையும், திருமூலர் பாடிய திருமந்திரம் ஆகிய நூல்கள் சொல்லும் பொருள்கள் அனைத்தும் ஒன்று தான் என்று நீ உணர்ந்து கொள்.

Koviloor Digital Library

பக்தியால் வென்ற சுதர்சனன்

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

பிறந்த சில காலத்திற்குள் பெற்ற தந்தையையும் பிறந்த பொன்னாட்டையும் விதிவசத்தால் இழந்தான் ஒரு ராஜகுமாரன். ஆனால் பராசக்தியின் மேல் பக்தி வைத்ததால் தான் இழந்த நாட்டையும் அரச பதவியையும் திரும்பப் பெற்றான் அவன். அவனது அபரிமித பக்தியால் அன்பகலாத மனைவியும் கிடைத்தாள். அவனுடைய கதையைப் பார்ப்போம்.

கோசல நாட்டைச் சூரிய வம்சத்தில் தோன்றிய துருவசிந்து என்ற மன்னன் ஆண்டுவந்தான். இவனுக்கு மனோரமா என்ற பட்டத்து ராணியும், லீலாவதி என்ற ஆசை மனைவியும் உண்டு. ஒரே சமயம் இருவரும் கருத்தரித்து மனோரமாவுக்கு சுதர்சனன் என்ற மகனும், லீலாவதிக்கு சத்ருஜித் என்ற மகனும் பிறந்தார்கள்.

ஒருமுறை காட்டிற்கு வேட்டையாடச் சென்றான் துருவசிந்து. பாய்ந்து வந்தது சிங்கம் ஒன்று. மன்னன் தன் வலிமை முழுவதும் காட்டிப் போரிட்டும் அது மன்னனைக் கடித்துக் கொன்று விட்டது. உடனே நாட்டில் ஆரம்பித்து விட்டது சத்ருஜித் மற்றும் சுதர்சனனின் வாரிசுரிமைப் போராட்டம்.

அமைச்சர்கள் ஒன்றுகூடிப் பட்டத்து ராணியின் மகனான சுதர்சனன்தான் ஆட்சிக்கு வரவேண்டும் என்று முடிவெடுத்தார்கள். மக்களின் விருப்பமும் அதுவாகவே இருந்தது. ஆனால் சத்ருஜித்தின் பாட்டனாராகிய யுதாஜித் தன் பேரன் அரசனாக வேண்டும் என்று நயவஞ்சகர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டு போர் புரியத் தொடங்கினான். தன் பேரன் சுதர்சனன் ஆட்சியில் அமரவேண்டும் என விரும்பிய சுதர்சனனின் பாட்டனாகிய வீரசேனனும் யுதாஜித்தை எதிர்த்துப் போர்புரிந்தான். ஆனால் யுதாஜித் தந்திரமாக வீரசேனனை மடக்கிக் கொன்று தன் பேரனான சத்ருஜித்தை அரசனாக்கினான்.

Koviloor Digital Library

படையெடுத்து வர பரத்வாஜ முனிவரோ அவனுக்கு அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தார். முனிவரின் சாபத்துக்குப் பயந்து அவனும் திரும்பிச் சென்றான்.

பிறந்ததில் இருந்தே நல்ல பக்தியுடன் இருந்த சுதர்சனன் பராசக்தியின் “க்லீம்” என்ற மந்திரத்தைக் கேட்க நேர்ந்தது. அன்றிலிருந்து அம்மந்திரத்தை அவன் எப்போதும் உச்சரித்துக் கொண்டே இருந்தான். அதனால் அவனுக்கு ஞானமும் தேஜஸும் சிறந்த வலிமையும் உண்டானது. முனிவர் பெருமானும் இவனைக் கண்டு மகிழ்ந்து இன்னும் பல்வகைப்பட்ட கலைகளையும் கற்பித்தார். அவனது பக்தியைக் கண்டு மகிழ்ந்த பராசக்தியும் அவனுக்குக் கூரிய அம்புகளையும் சிறந்த வில்லையும் வழங்கி அருளினாள்.

ஒருமுறை காசி தேசத்தின் அமைச்சர்கள் அந்த ஆசிரமத்தின் வழியே சென்றார்கள். அவர்கள் சுதர்சனனின் பேரழகையும் பெருவலிமையையும் கண்டு வியந்து காசி மன்னனின் மகளான சசிகலை என்பவளிடம் புகழ்ந்து உரைத்தார்கள். அன்றிலிருந்து அவளும் சுதர்சனனின் நினைவாகவே இருந்து வந்தாள். பராசக்தியின் பக்தையான அவள் பராசக்தியிடம் தான் சுதர்சனனையே மணக்க விரும்பிப் பிரார்த்தித்தாள்.

நடந்த அநியாயங்களைப் பார்த்த மனோரமா இன்னும் அந்த நாட்டில் இருந்தால் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இருக்காது எனக் கருதி இரவோடிரவாக நகரை விட்டு வெளியேறினாள். அந்தோ பரிதாபம். அக்காட்டில் திருடர்கள் சிலர் அவளது ஆடைகளையும் ஆபரணங்களையும் பறித்துச் சென்றார்கள். அவளோ தானும் மகனும் உயிர் தப்பினால் போதுமெனப் பரத்வாஜர் முனிவரின் ஆசிரமத்தைத் தஞ்சம் அடைந்தாள்.

அவளது துயரக் கதையைக் கேட்ட முனிவர் அவளை அங்கேயே தங்க அனுமதித்தார். மனோரமா தன் மகனுக்குப் பராசக்தியின் பெருமையைக் கூறி அவள் அருளால் தங்க ஒரு நல்ல புகலிடம் கிடைத்தது என மகிழ்ந்தாள். மனோரமாவும் சுதர்சனனும் உயிரோடு இருப்பதை அறிந்த யுதாஜித் ஆசிரமத்துக்கும்

Koviloor Digital Library

அம்பிகையும் அவள் கனவில் தோன்றி அவள் மனோரதம் நிறைவேறிச் சர்வ சௌபாக்கியங்களும் பெறுவாள் என வரமருளி மறைந்தாள்.

சுதர்சனனின் மேல் வைத்த காதலை அவள் தன் தந்தையான காசிராஜனிடம் கூற அவரோ மன்னனாக இருப்பவன்தான் அவளை மணக்க இயலும் எனவே பந்தய சுயம்வரம், வீர சுயம்வரம், இச்சா சுயம்வரம் ஆகியவற்றுள் இச்சா சுயம்வரம் நடத்தத் தீர்மானித்து அனைத்து அரசர்களுக்கும் ஓலை அனுப்பினான்.

சசிகலை தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரை அழைத்துப் பரத்வாஜ முனிவரின் ஆசிரமம் சென்று சுதர்சனனைச் சந்தித்து சசிகலையின் காதலைப் பற்றியும், சுயம்வரத்தில் சுதர்சனன் கலந்து கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளையும் சொல்லி அவனுக்கே தான் மாலை சூட்டுவதாகவும் சொல்லி அனுப்பினாள். அதைக் கேட்டு வியந்து சுதர்சனனும் அந்த மனிதரிடம் தன் ஒப்புதலைக் கூறி அனுப்பினான்.

மன்னர்கள் பலர் கலந்துகொள்ளும் சுயம்வரப் போட்டியில் தன் மகன் அவமானப்பட நேரும் என மனோரமா தடுத்தாள். சுதர்சனன் பராசக்தியின் அருள் நம்மைக் காப்பாற்றும் என்று கூற அவனுக்குத் தேவி கவசத்தைக்கூறி வாழ்த்தி ஆசி கூறி அனுப்பினாள்.

சசிகலை சொல்லி அனுப்பிய சுயம்வர தினத்தன்று சுயம்வர மண்டபத்துக்குள் நுழைந்தான் சுதர்சனன். பல தேசத்து ராஜகுமாரர்களும் தமக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் வீற்றிருந்தார்கள். சுதர்சனனின் சகோதரன் சத்ருஜித்தும் பாட்டனார் யுதாஜித்துமே இருக்கைகளில் அமர்ந்திருந்தார்கள். அரச பதவியில் இல்லாத சுதர்சனன் ஒதுங்கி நின்றான்.

மண்டபத்தில் நுழைந்த சசிகலை தன் மனம்கவர்ந்த சுதர்சனன் ஒரு தூணோரம் நிற்பதைப் பார்த்து வேகமாக வந்து மாலையிட்டாள். உடனே யுதாஜித் வெகுண்டு போர்புரியத் தயாரானான். காசிமன்னனோ தன் மகளின் திருமணம் நல்லபடியாக முடிந்தபின் போரை வைத்துக் கொள்ளலாமெனக் கூற அனைவரும் அமைதியாயினர்.

திருமணம் முடிந்து சுதர்சனன் பரத்வாஜர் ஆசிரமத்துக்குத் தன் மனைவி சசிகலையுடன் புறப்பட்டான்.

Koviloor Digital Library



அவனைப்பின் தொடர்ந்து போரிட்டான் யுதாஜித். ஏற்கனவே அம்பிகையின் அபரிமிதமான அருளைப் பெற்றிருந்த சுதர்சனன் அம்பிகை கொடுத்த கூரிய அம்புகளையும் வில்லையும் வைத்துப் போர் புரிந்து அனைவரையும் தோற்றோடச் செய்தான்.

பரத்வாஜரின் ஆசிரமத்துக்கு வந்து முனிவரையும் தாயையும் வணங்கினான். பின்னர் தன் பொன்னாட்டை மீட்க வேண்டிப் படை எடுத்துச் சென்றான். அவனது சகோதரன் சத்ருஜித்தும் இயல்பிலேயே நல்லவன் என்பதால் தன் சகோதரனுடன் சமாதானம் செய்து கொண்டு நாட்டை வழங்கினான்.

முனிவருக்கு நன்றி சொல்லித் தாயையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு நாட்டுக்குத் திரும்பிய சுதர்சனன் சக்கரவர்த்தியாகப் பட்டம் சூட்டிக் கொண்டான். அன்னையின் க்லீம் என்ற பீஜாக்ஷர மந்திரத்தை அல்லும் பகலும் பக்தியுடன் உச்சரித்து வந்ததாலேயே அவன் தன் அனைத்து இன்னல்களையும் வென்று மீண்டும் தன் பொன்னாட்டையும் அன்பான மனைவியையும் பெற்றான். எனவே பக்தியும் நம்பிக்கையும் எதையும் பெற்றுத் தரும் என்பதை உணர்வோம்.

Koviloor Digital Library

சிவாலயங்களின் சிறப்புகள் - 17

சிவனேச செல்வர்களுக்குப் பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

திருக்கோணேஸ்வரம்

இலங்கையில் திரிகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள அற்புதமான சிவஸ்தலம். நெய்தல் மருதம் முல்லை குறிஞ்சியென நால்வகை நிலங்களும் சூழ அமைந்துள்ள ஸ்தலம்

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற சிவாலயங்களில் 269 ஆவது தேவாரத்தலம் இலங்கையில் உள்ள திருக்கோணேஸ்வரம்.

இத்தலத்திற்கு திருக்குணமலை, திருமலை, தட்சிண கயிலாயம், கோகர்ணம், திரிகூடம், மச்சேஸ்வரம் எனப் பல பெயர்கள் உண்டு.

திருஞானசம்பந்தராலும் அருணகிரிநாதராலும் பாடல் பெற்ற சிவஸ்தலம்

சிவபெருமானின் திருவுளப்படி வாயு தேவனால் கயிலை மலையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டு திரிகோணமலையில் ஸ்தாபிக்கப்பட்ட குன்றுதான் திருக்கோணேஸ்வரம்.

இராவணனால் பூசிக்கப்பட்ட சிவ ஸ்தலம். இராமன், அகத்தியரும் வழிபட்ட தலம் இது

திருஞானசம்பந்தர் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை என்று போற்றிப் புகழ்ந்து பாடுகிறார்

திருஞானசம்பந்தர் இராமேஸ்வரத் திலிருந்து ஒரு படைகள் அமர்ந்தவாறு திருகோணமலை கோனேஸ்வரரைப் பற்றி

Koviloor Digital Library

10 பாடல்களைப் பாடியுள்ளார்

திருஞானசம்பந்தர் பத்துப் பாடல்களில் கோணமாமலை யமர்ந்தாரேயென ஒன்பது பாடல்களின் கடைசி வரியிலும் பத்தாவது பாடலில் கோணமாமலை அமர்ந்தாரேயென இரண்டாவது வரிகளும் பாடியுள்ளார்

திருஞானசம்பந்தர் தேவாரத்தில்

'குரைகடலோதம் நித்திலங் கொழிக்குங் கோணமாமலை யமர்ந்தாரென்றும்', 'குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை யமர்ந்தாரென்றும்', 'வன்திரைகள் கரையிடைச் சேர்க்கும் கோணமாமலை யமர்ந்தாரென்றும்', 'கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரென்றும்', 'விருந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கைவன் செருந்தி செண்பகத்தின் குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலை யமர்ந்தாரென்றும்', 'துன்றுமொண் பௌவம் மவ்வலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறு திரை பல மோதிக் குன்று மொண்கானல் வாசம் வந்துலவுங் கோணமாமலையமர்ந்தாரென்றும்' கூறியுள்ளார்.

அருணகிரிநாதர் அவர் பாடிய திருப்புகழில் இரண்டு பாடல்கள் திருக்கோணேஸ்வரர் திருத்தலத்தைப் பற்றியும் கோயிலின் பிரம்மாண்டமான கோபுரங்களைப் பற்றியும் பாடுகிறார்

திருநாவுக்கரசர் தன்னுடைய ஒரு பதிகத்திலும் சுந்தரர் தன்னுடைய ஒரு பதிகத்திலும் திருகோணேஸ்வர நாதரைப் பற்றிப் புகழ்ந்து பாடுகிறார்

Koviloor Digital Library

திருகோணேஸ்வரத்தைப் பற்றிப் பல நூல்கள் உள்ளன அவற்றில் அவற்றில் முக்கியமானவை

1 ஸ்ரீ தக்ஷின கைலாசப் புராணம்

2 திருக்கோணேஸ்வரர் தேரடி சிந்து

3 மாதுமை அம்பாள் தேரடி சிந்து

4 திருகோணேஸ்வரர் திருஊஞ் சல் பதிகம்

5 திருக்கரசை புராணம்

6 திரிகோணாசல புராணம்

7 கோனேசர்கல்வெட்டு

8 திரிகோணமலை புராணம் போட

9 கோணமலை அந்தாதி

10 கோனேஸ்ராற்றுப்படை

11 திருகோணாசல வைபவம்

இலங்கையில் பல புண்ணிய ஸ்தலங்கள் உள்ளன திருக்கோணேஸ்வரம் என்ற தக்ஷிண கைலாயமும் திருக்கேதீ ஸ்வரமும் சிவபெருமானுக்கு உரிய ஸ்தலங்கள். வல்லிபுரம் பொன்னாலயம் என்ற இரண்டு இடங்களும் விஷ்ணு உரிய ஸ்தலங்கள். கண்டகி வடகந்தாரம் சோதிஷ் காமகிரி கந்தப் பர்வதம் ஆகிய மூன்று இடங்களும் முருகனுக்கு உரிய ஸ்தலங்கள்

கோணேசர் ஆலயம் உலகில் உள்ள பழைய வழிபாட்டுத் தலங்களுள் மிகவும் பழைமையான ஒன்றென்பதும், திருகோணமலை நாகரிகமும், மொஹஞ்சதாரோ நாகரிகமும் ஏறக்குறைய ஒரே காலத்தன என்பதும் ஆராய்ச்சியாளர் சிலரின் துணிபு.

சுவாமியின் பெயர் : கோனேஸ்வரர்

அம்பாளின் பெயர்: மாதுமை அம்பாள்

Koviloor Digital Library

தீர்த்தம் : பாபநாசத் தீர்த்தம்

தல விருட்சம் : கல்லால்

கருவறையில் காசியிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது

கருவறையில் அமைந்துள்ள லிங்கம் சுயம்புலிங்கம் இத்தலத்தின் பெயரைக் கொண்டு கோணலிங்கம் என்று பக்தர்கள் பக்தியுடன் கூறுகிறார்கள்

முதலில் கல்லால மரத்துக்குப் பூஜை செய்துவிட்டு பின்னரே மூலவர் மற்றும் கோயில் சன்னதிகளில் பூஜை நடைபெறுகிறது. 33 அடி உயர சிவபெருமான் சிலை உள்ளது. இக்கோவில் பதினெட்டு மகாசக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப் பகுதி விழுந்த பீடமாகவும் தந்திரச் சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தேவியின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகிறது. கச்சியப்ப சிவாச்சாரியார் சிவபெருமானின் ஆதி இருப்பிடங்களில் திபெத்தில் உள்ள திருக்கயிலாய மலை யினையும் சிதம்பரம் கோ யிலையும் திருகோணமலையையும் கந்த புராணத்தில் மிக முக்கிய மூன்றினுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். கிட்டத்தட்ட 3000 வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இக்கோயிலுக்குச் சுமார் 1700 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் இருந்தன. இங்கு மகாவலி கங்கை அருகில் உள்ள கடலுடன் கலப்பதால் இப்பகுதி முழுவதும் நீர்வளம், நிலவளம் பெற்றுச் செழிப்பாக இருந்தது.

இராவணன் தன்னுடைய தாயாரின் வழிபாட்டிற்காக லிங்கத்தைப் பெறுவதற்காகச் சிவனை நோக்கித் தவம் செய்து இந்த லிங்கத்தைப் பெற்றார் என்பது வரலாறு. அகங்காரம் கொண்ட ராவணன் இந்தத் தென் கயிலை மலையை வெட்டிப் பிளந்தான் என்று வரலாறு கூறுகிறது அதற்கு எடுத்துக்காட்டாகக் கோனேஸ்வர்

Koviloor Digital Library



கோவிலுக்குப் பக்கத்திலேயே இராவணன் வெட்டு என்று மலை பிளவு காணப்படுகிறது இராவணன் வழிபட்ட பழைய கோணேசுவரம் கடல்கொள்ளப்பட்டு, கடலுக்கடியில் இருப்பதாக ஆழ்கடல் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துக் கூறியுள்ளனர்

குளக்கோட்டன் என்னும் சோழ மன்னன் திருக்கோணேசுவரர் ஆலயத்தைத் திரும்பவும் கட்டுவித்துத் திருப்பணிகள் செய்ததாகச் சில சாசனங்கள் கூறுகின்றன

இத்திருத்தலம் 1624ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று போர்த்துக்கேயத் தளபதியினால் இடித்தழிக்கப்பட்டுக் கோட்டை கட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. அவன் கோவிலை இடித்தபொழுது செய்த நல்ல செயல் ஆலயத்தை இடித்துத் தகர்க்குமுன் அதன் படத்தை வரைந்து வைத்திருந்தமையேயாகும். அப்படங்களுள் ஒன்று போர்த்துக்கலில் உள்ள “லிஸ்பன்” நகரில் உள்ள உலகப் பிரசித்தி பெற்ற “அட்சுடா” நூல்நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டு 1889இல் இலங்கையில் பிரசுரிக்கப்பட்டது. கோணேசர் கோவில் புனர்நிர்மாணம் பெற்று விளங்குவதற்கு முன்னோடியாய் நின்று உழைத்த, டாக்டர் பாலேந்திராவிற்கு உதவியாயிருந்த கருவிகளில் இப்படமும் முக்கியமான ஒன்றாகும், 1953இல் இப்பெரியாரால் வெளியிடப்பட்ட “திருகோணமலை விக்கரகங்கள்” என்ற நூலே திருக்கோணசுவரம் பற்றி முதன் முதலாக எழுந்த இக்கால அமைவுபெற்ற ஆராய்ச்சி நூலாகும்

Koviloor Digital Library

திருக்கோணேசர் ஆலயம் கி. பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை பல மன்னர்களாலும், திருப்பணி செய்யப்பட்டு வந்துள்ளது

கோவிலைப் புனருத்தாரணஞ் செய்வதற்காக 971950இல் நிறுவப்பட்ட இருப்பணிச் சபை, கிணெறொன்றைத் தோண்டிய பொழுது நிலத்துள்ளிருந்து தாமிர மயமான சோமாஸ்கந்தர், பார்வதி, சந்திரசேகரர் முதலான விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன,

தற்பொழுது இந்தக் கோயிலைச் சுற்றி ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவில் ஆலடி பிள்ளையார் கோயில் வில்லூன்றி கந்தசாமி கோயில் முத்துக்குமாரசுவாமி கோயில் விஸ்வநாத ஸ்வாமி கோயில் வீர கத்தி பிள்ளையார் கோயில் மாரியம்மன் கோயில் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் சமாதுப் பிள்ளையார் கோயில் சனீஸ்வரன் கோயில் கும்பத்துமால் கருமாரியம்மன் கோயில் நடேசன் கோயில் எனப் பல திருக்கோயில்கள் சூழ்ந்து உள்ளன



ஸ்ரீ மாதுமை அம்பாள்: முத்து அம்மன் ஒரு கையில் ஜெப மாலை விடணும் மரு கையில் நீலோற்பவம் மலருடனும் மற்றொரு கை அபயம் வரதமாக நான்கு திருக்கரங்களுடன் அருள் தருகிறார். இங்கு நடராஜர் நடேசன் என அழைக்கப்படுகிறார் நடராஜர் வடக்கு திசை நோக்கி அருள் தருகிறார் வருடத்தில் ஆறு தினங்கள் அபிஷேகம் நடைபெறுகிறது

திருக்கோயிலில் வைரவர் சூரியன் சந்திரன், நாகத் தம்பிரான் நவகிரகங்கள் சன்னதி அமைந்துள்ளது. அன்புள்ள வசந்தம் மண்டபத்தில் பிள்ளையார் சோமாஸ்கந்தர் மாதுமை அம்பாள் போகச் சக்தி ராஜராஜேஸ்வரி சந்திரசேகரன் வள்ளி தேவயானி சமேதராகச் சுப்ரமணியர் சண்டிகேஸ்வரர் ஆகியோருக்கு உற்சவமூர்த்தி சிலைகள் உள்ளது

சேக்கிழார் நால்வர் நிறுத்தக் கணபதி தட்சிணாமூர்த்தி

வெளிப்பட்டன. அவையாவும் அண்மைக் காலத்திலமைக்கப் பெற்ற திருக்கோயிலில் ஆங்காங்கே எழுந்தருளச் செய்யப்பெற்றுள்ளன.

ஆறுகால பூசை ஆகம விதிகளின்படி தவறாமல் நடைபெறுகின்றன.

திருக்கோணேசப் பெருமானின் விழாக்களில்

மகா கணபதி லிங்கோத் பவர் பிரம்மா துர்க்கை சுப்பிரமணியர் சண்டிகேஸ்வரர் ஆகாய லிங்கம் ஆதிலிங்கம் லட்சுமி நாராயணர் ஆகியோருக்குச் சன்னதி அமைந்துள்ளது

குழந்தை வரம் வேண்டி நிறைய பக்தர்கள் இங்கு மரத்தால் செய்யப்பட்ட தொட்டிலைக் கட்டுகிறார்கள்.

இக்கோயிலின் வரலாறு 3287 ஆண்டு பழமை வாய்ந்ததாகும். இதற்குத் திரிகூடம் என்றும் பெயருண்டு.

அக்காலத்தில் நகரசபையார் கிணறு தோண்ட முயன்றபோது மூன்றடி தோண்டிய வேளையில் சிவனருளோ என்று கண்டவர்கள் அதிசயிக்கும் வண்ணம் மாதுமையாள் சமேத கோணேசுவரப் பெருமானோடு, சந்திரசேகரர், பார்வதியார், பிள்ளையார், அஸ்திரதேவர் முதலாய தெய்வத்திருவுருவங்கள்

வெளிவாரியாக நடைபெறுவது ஆடி அமாவாசை விழாவாகும். கடலில் தீர்த்தமாடுவதற்குப் பெருமான் எழுந்தருளும்போது, நகரில் உள்ள ஆலயங்களின் மூர்த்திகளும் தீர்த்தமாட அங்கே எழுந்தருளுவார்கள். ஆடி மாதம் போலவே, மகாமகத் தீர்த்த விழா, பங்குனி மாதத்தில் பூங்காவன மற்றும் தெப்பத் திருவிழா, மார்கழியில் திருவெம்பாவை விழா ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நவராத்திரி நாட்களில் ஸ்ரீ சக்ரபூஜை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

ஆதிகோண நாயகர் திருக்கோயில் கற்கோயிலாகும்.

திருமூலர் இலங்கையைச் சிவபூமி என்றும் (திருமந்திரம் 2747), இலங்கையில் மேருவின் குறியைக் காணலாம் என்றும் கூறியுள்ளார், அவர் கூறிய மேருவின் குறி கோணேசர் மலையேயாம்

Koviloor Digital Library

திவ்ய தேச கவிதை தரிசனம் –34

திருவாலி - திருநகரி

அழ. மணிமேகலை,
காரைக்குடி

108 திவ்ய தேசங்களுள் முப்பத்துநான்காவது திவ்ய தேசம், திருவாலிதிருநகரி. சோழநாட்டுத் திருப்பதிகளுள் இது முப்பத்துநான்காவது திவ்யதேசமாகும். இத்தலம் சீர்காழியிலிருந்து ஆறு மைல் கல் தொலைவில் அமைந்துள்ளது. திருவாலி தனியாகவும், திருநகரி தனியாகவும் உள்ளது. இவ்விரு தலங்களும் தனித்தனியே இருந்தாலும் ஒரே திவ்யதேசமாகத்தான் ம ங் க ள ா ச ா ச ன ம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில், இத்திவ்ய தேசத்தின் முதல் தலமான திருவாலி, ஆலிநாடு என்று ஒரு குறுநிலப் பகுதியாக, மிகப் புகழ் வாய்ந்ததாக இருந்தது. திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனை வதம் செய்தார். வதம் செய்த பின்பும் சீற்றம் அடங்காமல் இருந்தார். இதைக் கண்டு தேவர்களும் ரிஷிகளும் பூலோகம் மேலும் அழியாது காக்கப்பட வேண்டும் என்று பிராட்டியை வேண்டினர். பிராட்டியும் வேண்டுகோளை ஏற்று எம்பெருமானின் வலது தொடையில் வந்து அமர்ந்தார். அமர்ந்த தேவியை எம்பெருமான் ஆலிங்கனம் செய்த திருக்கோலத்தில் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளதால், இத்தலம் திருவாலி ஆயிற்று. அதாவது, திருவாகிய இலக்குமியை ஆலிங்கனம் செய்து வீற்றிருக்கும் தலம்.

இந்த ஆலி நாட்டைத் தலைநகரமாகக் கொண்டுதான்

Koviloor Digital Library

தொடையின் மேல் வைத்துக் கொண்டு வீற்றிருக்கும் திருக்கோலம். பொதுவாக லெஷ்மி நரசிம்மர் கோவில்களில், லெஷ்மி இடது மடியில்

திருமங்கை குறுநில வேந்தனாகத் திகழ்ந்தார். எனவே தான் அவர் ஆலிநாடான் என அழைக்கப்பட்டார்.

இங்குள்ள,

மூலவர் - அழகிய சிங்கர் என்னும் லெட்சுமி நரசிம்மர்

தாயார் - பூர்ணவல்லி என்னும் அம்ருதகடவல்லி

உற்சவர் - திருவாலிநகராளன்

தீர்த்தம் - இலாஷ்ண புஷ்கரணி

விமானம் - அஷ்டாச்சர விமானம்

கோலம் - வீற்றிருந்த திருக்கோலம்

வாசலைத் தாண்டி உட்சென்றால், திருமாமணி மண்டபம், பின் பலிபீடம், கொடிமரம், பெரிய திருவடிக்கான சன்னதி, வாசல் கதவிலிருந்து மொத்தப் பகுதிக்கும் போடப்பட்டிருக்கும் நிழல் தரும் மேற்கூரை, எம்பெருமான் திருமகளை வலது

அமர்ந்திருப்பார். ஆனால் இங்கே வலது மடியில் அமர்ந்திருக்கும் அபூர்வக் கோலம். இவ்விடத்துப் பெருமாளுக்கு ஏவரி வெஞ் சிலையான் என்ற பெயரும் உண்டு.

Koviloor Digital Library

எம்பெருமான் லெஷ்மிதேவியுடன் நரசிம்மரூபமாய் இத்தலத்தில் எழுந்தருளியிருப்பதால், இத்தலம் லெட்சுமி நரசிம்ம ஷேத்திரம் ஆயிற்று. இதனையும் சேர்த்து இவ்விடத்தைச் சுற்றி மூன்று நரசிம்ம ஷேத்திரங்களும் திருநகரியில் இரண்டு நரசிம்ம ஷேத்திரங்களும் ஆக மொத்தம் ஐந்து நரசிம்ம ஷேத்திரங்கள் உள்ளன. அவை பஞ்ச நரசிம்ம ஷேத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

1. திருவாலி - அழகிய சிங்கர் என்னும் லெட்சுமி நரசிம்மர்

2. குறையலூர் - உக்கிர நரசிம்மர்

3.மங்கைமடம் - வீர நரசிம்மர்

4. திருநகரி - யோக நரசிம்மர்

5.திருநகரி - ஹிரண்ய நரசிம்மர்

திருமங்கையாழ்வார் பிறந்த ஊர் தான் திருக்குறையலூர். இவருடைய மனைவி குமுதவல்லி, மனைவியாவதற்கு முன் சொன்ன விருப்பப்படி அன்னதானம் செய்த ஊர் தான் மங்கைமடம். திருமங்கையாழ்வார் இத்தலத்துப் பெருமானை திருவாலியம்மானை, அணியாலியம்மானை என்று அழைத்து மகிழ்கிறார்.

இரண்டாவது தலமான திருநகரி, வில்வாரண்யம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு யோக நரசிம்மர் சுயம்புவாக எழுந்தருளியுள்ளார். பிரம்மாவின் ஐந்தாவது புத்திரன் கர்த்தம பிரஜாபதி. இவர் மோட்சம் வேண்டுமென, இவ்விடத்தில் திருமாலைக் குறித்துக் கடுந்தவம் செய்தார். இவருக்கு அருள் செய்வதில் எம்பெருமான் மிகுந்த காலதாமதம் காட்டினார். பக்தனுக்கு விரைவில் காட்சி கொடுக்க வேண்டும் என்று பிராட்டி வேண்டிக் கொண்டாலும் எம்பெருமானோ சற்றும் செவி சாய்க்காமல் பொறுமை காட்டி நின்றார். இதனால் சினமுற்ற பிராட்டி, வைகுந்தத்தை விட்டு பூவுலகு வந்து இவ்விடத்து அமைந்திருந்த ஓர் அழகிய தாமரை மலருக்குள் தன்னை மறைத்துக் கொண்டாள். திருமகள் இல்லாத வைகுந்தம் பொலிவு குன்றியது.

திருமால் திருமகளைத் தேடி இவ்விடம் வந்தார். திருமகளுக்குத் தாமரையின் மீது விருப்பமிருப்பதால், தாமரையில் தான் மறைந்து இருக்க வேண்டும் என ஊகித்து, தாமரைகளை உற்று நோக்கினார். தாமரைகளோ இதழ் விரிக்காது ஒரே மாதிரி

Koviloor Digital Library

மொட்டாக இருக்கக் கண்டார். திருமாலின் வலது கண் சூரியன், இடது கண் சந்திரன். அதனால் எம்பெருமான் தனது வலது கண்ணை மூடிக்கொண்டு இடது கண்ணைத் திறந்தார். சந்திர ஒளி வந்துவிட்டது என எண்ணி, அனைத்துத் தாமரை மலர்களும் மலர்ந்து விட்டன. ஆனால் அப்படியும் ஒரு தாமரை மலர் மட்டும் மலராது நின்றது. அதற்குள் தான் ஸ்ரீ இருக்க வேண்டும் என்று நினைத்த எம்பெருமான் ஓடி வந்து தாமரை மலருக்குள் இருந்த ஸ்ரீயை ஆலிங்கனம் செய்து கொண்டார். எனவே இத்தலம் ஆலிங்கனபுரி என்றும் ஸ்ரீபுரி என்றும் அழைக்கப்பட்டது. அழகிய தமிழில் திருநகரியானது.

திருவாலி, திருநகரி ஆகிய இரு தலங்களிலுமே திருமால் திருமகளை ஆலிங்கனம் செய்து கொண்டமையால், இந்த இரு தலங்களும் சேர்ந்து ஒரே திவ்ய தேசமாக ஆயிற்று.

இங்குள்ள,

மூலவர் - வேதராஜன் (வயலாளி மணவாளன்)

தாயார் - அம்ருதவல்லி

உற்சவர் - கல்யாணரங்கநாதன்

விமானம் - அஷ்டாச்சர விமானம்

கோலம் - மேற்கு நோக்கி அமர்ந்த திருக்கோலம்

இத்தலத்தில் பெருமாளுக்கு எதிரே ஒரு கொடி மரமும், திருமங்கையாழ்வார் சன்னதிக்கு எதிரே ஒரு கொடி மரமும் என ஆக மொத்தம் இரண்டு கொடி மரங்கள் உள்ளன. கல்யாணக் கோலத்தில் ரங்கநாதர் வடிவில், திருமங்கைக்குக் காட்சி கொடுத்ததால், இத்தலத்துப் பெருமாள் கல்யாண ரங்கநாதர் என அழைக்கப்படுகிறார். இத்தலம் மூலவர் பெயரால் வேதராஜபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏழு

Koviloor Digital Library

நிலை இராஜகோபுரங்களைக் கொண்டது. திருமங்கையாழ்வாரால் பூஜிக்கப்பட்ட சிந்தனைக்கினியான் என்னும் விக்கிரகம், இராமானுஜர் காலத்தில் திருக்குறுங்குடி யிலிருந்து கொண்டுவரப்பட்டு இத்தலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அம்பிகையிடம் ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தர், சீர்காழி சொந்த ஊர் என்பதால், அங்கேயே இருந்து சிவத்தொண்டு செய்து கொண்டு இருந்தார். அப்பொழுது திருமங்கையாழ்வார் வடதேச யாத்திரை சென்று, அவ்வூருக்கு வந்த சமயம், அவரின் சீடர்கள் திருமங்கையின் விருதுப் பெயர்களை உரக்கக் கூவிக் கொண்டு வந்தனர். அப்போது அங்கு நின்றிருந்த சிவனடியார்கள், ஞானசம்பந்தர் அங்கு எழுந்தருளியிருப்பதால், “நீங்கள் யாரும் உங்கள் தலைவரின் விருதுப் பெயர்களை இங்குக் கூவிக்கொண்டு செல்லக்கூடாது” எனத் தடுத்தனர். இவர்கள் மறுக்க வாதம் வளர்ந்தது. ஒரு கட்டத்தில் இதை ஞானசம்பந்தரும் திருமங்கையாருமே மறுநாள் பேசித் தீர்த்துக் கொள்வதென முடிவு ஏற்பட்டது.

திருமங்கையை நோக்கிய ஞானசம்பந்தர், “உம்மைப் பெரிய வரகவி என்று விருது ஓதி செல்கின்றார்களே! அப்படியானால், உம்மால் ஒரு குறள் சொல்ல முடியுமா எனக் கேட்டார். உடனே திருமங்கையாழ்வார், எம்பெருமான் குறளாய், அதாவது குள்ள வாமனனாய் அவதாரம் எடுத்ததை மனதில் நிறுத்தி ”ஒரு குறளாய்” என்ற வார்த்தையையே கவியின் முதல் அடியாகக் கொண்டு, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என்னும் எண் வரிசையிலும்

Koviloor Digital Library

தொடர்ந்து எம்பெருமானின் பத்து அவதாரங்களையும் வைத்து, பத்துப் பாசுரங்களைப் பாடுகின்றார். மகிழ்ந்த ஞானசம்பந்தர் அவரது வேலை, திருமங்கையாழ்வாருக்குப் பரிசாக அளிக்கின்றார். பின் திருமங்கையாழ்வாரின் காலில் வீரக்கழலாகிய தண்டையையும் அணிவித்தாராம். இவ்வாறு திருஞானசம்பந்தரை வாதில் வென்று அவரிடம் பெற்ற வேலோடு ஒரு வேடனைப் போல் திருமங்கை இங்குக் காட்சியளிப்பது காணத்தெவிட்டாதப் பேரழகாகும்.

திருமங்கையாழ்வார் திருக்குறுங்குடியில் இருந்த போது, தம்மைப் போலவே ஒரு பிம்பம் செய்து, தான் அப்பிம்பத்தின் நேரில் நின்று கொண்டு "வா" என்று அழைத்தார். பிம்பம் நடந்து வர, அதனைக் கட்டித்தழுவி தன் சக்தி முழுவதையும் அப்பிம்பத்தில் செலுத்தினார். அதன் பிறகே திருமங்கை ஆழ்வார் மோட்சம் எய்தினார். அப்பிம்பம், இப்போது திருநகரியில் வைக்கப்பட்டுள்ளது, அதற்கு நித்திய பூசைகளும் நடைபெறுகின்றன.

திருநகரி, திருவாலி கோவில்களுக்குத் திருமங்கையாழ்வாரின் கதை தான் முக்கியமாக உள்ளது. திருநகரிக்கு அருகாமையில் உள்ள குறையலூரில் சோழனின் ஆளுகைக்கு உட்பட்ட சேனைத்தலைவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தார். அவனது திருமேனி நீல வண்ணமாக இருந்ததால், நீலன் என்று அழைக்கப்பட்டான். நீலன் சோழ மன்னனின் படைத்தளபதியாக இருந்தார். அப்போது திருவெள்ளக்குளத்தில் குமுதமலர் கொய்ய வந்த தேவமகள், நேரம் கடந்துவிட்டபடியால்,

Koviloor Digital Library

விண்ணுக்குச் செல்ல முடியாது பூவுலகில் "குமுதவல்லி" என்னும் பெயருடன் திருவாலியில் வளர்க்கப்பட்டு வந்தாள். நீலன் குமுதவல்லியைப் பெண் கேட்டு வந்தபோது, ஒரு வருட காலத்திற்குத் தினந்தோறும் ஆயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அமுது படைத்து ததியாராதனம் செய்தால் தான் மணம் புரிவேன் என்ற நிபந்தனை விதித்தார், குமுதவல்லி. திருமங்கையாழ்வாரும் ததியாராதனம் செய்யத் தொடங்கினார். அதாவது, அடியார்களுக்கு அன்னமிடத் தொடங்கினார். சோழ மன்னனுக்காக வசூலித்த கப்பத் தொகையை எல்லாம் ததியாதாரனத்திற்கே செலவிட்டார். கப்பம் கட்டப் பணம் இல்லாத பொழுது, சோழன் திருமங்கையாழ்வாரை நாச்சியார் கோயிலில் சிறை வைத்தான். மூன்று நாட்கள் அன்ன ஆகாரமின்றி இருந்த திருமங்கையாழ்வாரின் கனவில் வந்த நறையூரான், "காஞ் சிபுரத்துக்கு வாரும், மாதனம் காட்டுகிறோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். மறுநாள், சோழன் படைத்தளபதியை அனுப்ப, காஞ்சிபுரத்தின் அருகில் உள்ள வேகவதி ஆற்றங்கரையில், திருநறையூரானின் திருவருளால் பெரும் புதையலைக் காட்டிக் கப்பம் தீர்த்தார், திருமங்கையாழ்வார். மீண்டும் ததியாராதனத்திற்குப் பொருளின்றிப் போகவே, வழிப்பறியில் இறங்கலானார் திருமங்கை.

இந்நிலையில், திருமங்கையாழ்வாருக்கு விரைவில் அருள்பாலிக்க வேண்டுமென்று, பிராட்டி எம்பெருமானுக்கு விடாது வேண்டுகோள் விடுக்கிறார். "நான் அருள்பாலிக்க வேண்டுமென்றால், திருவாலியில் தவம் செய்து கொண்டிருக்கும் பூர்ண மகரிஷியின் புத்திரியாகப் போய் நீ அவதாரம் செய்ய வேண்டும். நான் அங்கு வந்து திருமணக் கோலத்தில் உன்னை ஏற்றுக்கொள்ளும் போது திருமங்கைக்கு அருள் பாலிப்போம்", என்றார் எம்பெருமான்.

எம்பெருமானும் திருமணக் கோலத்தில் ஆலிமணவாளனாக திருவாலி திருத்தலத்திற்கு எழுந்தருளி, பூர்ண மகரிஷிடம் வளர்ந்த பூர்ணவல்லியை மணம் புரிந்து கொண்டு வந்து

கொண்டிருந்தார். எம்பெருமானும் தேவியும், திருவாலிக்கும் திருநகரிக்கும் இடைப்பட்ட வேதராஜபுரம் என்ற இடத்தில் வரும் போது, திருமங்கையாழ்வார் மறித்து வழிப்பறி செய்கிறார். வழிப்பறி செய்த பொருள்களை எல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டித் தூக்க முயன்றார். தன் சக்தி முழுவதையும் பிரயோகித்தும் தூக்க முடியாமல் போக, இவன் ஏதோ மந்திரம் போட்டு விட்டான் என்று தன் வாளினை உருவி மந்திரத்தைக் கூறுமாறு எம்பெருமானை மிரட்டுகிறார் எம்பெருமானும், "வா, சொல்கிறேன்" என அழைத்து, திருமங்கையின் செவிகளில் அஷ்டாச்சர மந்திரத்தை உபதேசித்து அருளினார். நீலன், குமுதவல்லி என்னும் மங்கையால், எம்பெருமானின் பக்தியில் ஆழ்ந்தமையால், மங்கையாழ்வாரானார்.

எம்பெருமான் பத்திரிகாசிரமத்தில், தானே ஆச்சாரியானுமாய், தானே சீடனுமாய் நின்று திருமந்திர உபதேசம் செய்தார். அந்தக் குறைதீர, ஸ்ரீ பத்ரி நாராயணப் பெருமாளே ஸ்ரீவயலாளி மணவாளப் பெருமாளாக, இத்தலத்தில் எழுந்தருளி திருமாகைக்குத் திருமந்திர உபதேசம் செய்து திருமங்கையாழ்வாரையும் ஆட்கொண்டார் அதனால், இத்தலம் பக்திகாசிரமத்துக்குச் சமமான தலமாகும்.

எட்டிழையாய், அதாவது "ஓம் நமோ நாராயணா" என்று எட்டு எழுத்துகளாக, மூன்று சரடாய், அதாவது ஓம், நமோ, நாராயணா என்று மூன்று சொற்களாய் இருக்கின்ற மங்களச் சூத்திரத்தை, திருமங்கையாழ்வாருக்குக் காட்டின இடமாகையால், இவ்விடத்தை "திருமணங்கொல்லை" என்று பெரியோர் கூறுவர்.

இவ்வாறு திருவாலி மணவாளப் பெருமானை வழிமறித்துத் திருவேடு பறி நடத்தி, திருமந்திர உபதேசம் பெற்ற நிகழ்வானது, வேதராஜபுரத்தில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்திற்கு முதல் நாள் இரவு அன்று, வேடுபறி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. திருமங்கை கொள்ளையிட்ட

Koviloor Digital Library

இடத்தில் வேடுபறி மண்டபம் என்றொரு மண்டபமும் உள்ளது.

தைமாதத்தில் திருநாங்கூர் பதினோரு திருப்பதிகளிலிருந்து பெருமாள்கள் கருட சேவையில் எழுந்தருளும் போது, திருமங்கையாழ்வாரையும் குமுதவல்லியையும் பல்லக்கில் அமர வைத்து, திருவாலி திருநகரி அருகே உள்ள திருநாங்கூர் பதினோரு திருப்பதிகளுக்கும் எழுந்தருளச் செய்து, திருமங்கையாழ்வார் அருளிய நாலாயிர திவ்ய பிரபந்தப் பாசுரங்கள் பாடப்படும்.

“திருவாலி – திருநகரி” குறித்து காப்பியக் கவிஞர் நா.மீனவனார் எழுதிய பாடல்களும், அவற்றின் விளக்கங்களும் பின்வருமாறு.

1. திருநகரியின் வயலாளி மணவாளன், அழகிய நங்கையாம் பூரணவல்லியை மணம்செய்து, அவளது கரம்பற்றி, தனது மணக்கோலத்தைத் திருவாலிநாடனான திருமங்கையாழ்வாருக்குக் காட்டியவன். அக்கோபாலனிடம் வரம் பெற்று வாழவேண்டுமென்றால், இத்திவ்ய தேசத்திற்கு வந்து அவனுடைய அடிகளைப் பணியவேண்டும்.

திருநகரி மணவாளன் திருவாலி நாடனுக்குப்
பொருவரிய நங்கைஎழில் பூரண வல்லியாள்
கரம்பற்றி மணக்கோலம் காட்டியநற் கோபாலன்
வரம்பெற்று வாழவெனில் வந்தடிகள் பணியுமினே.

2. வண்டுகள் மலர்களில் உள்ள தேனைக் குடித்துக் கொண்டிருக்க, வாயில் குழலூதிக் கொண்டு, கன்றுகளுடன் நிற்கின்ற பசுக்களும் அறியாத வழியை அறிந்து வைத்திருக்கும் அழகிய சிங்கரை, நமக்கெல்லாம் நல்வழியைக் காட்டுகிற கோவலனை நினைத்தாலே மேன்மை பெறலாம்.

பொறிவண்டு மலரூதப் பொற்குழலை வாயூத
நிறைவான கன்றோடு நிற்கின்ற பசுவனைத்தும்
அறியாத வழியறியும் அழகிய சிங்கனாய்
நெறிகாட்டும் கோவலை நினைத்தால்நீர் உய்வீரே.

3. கௌதம் மகரிஷியின் ரிஷிபத்தினி அகலிகை. அழகில் மிக உயர்ந்தவளாக இருக்கின்ற அகலிகை மேல் இந்திரனுக்கு ஆசை. ஒரு நாள் கௌதமர், ஆற்றங்கரைக்குச் சென்றிருந்த நேரம், இந்திரன் கௌதமராக உருமாறி அகலிகையை அடைந்தார். ஆற்றங்கரை

Koviloor Digital Library

யிலிருந்து திரும்பி வந்த கௌதமர், அகலிகையைக் கல்லாக மாறும்படி சபிக்கிறார். பின்பு இராமரின் பாதம்பட்ட அகலிகை சாபவிமோசனம் பெறுகிறார்.

என்றென்றும் தோள்களில் வில்லோடு இருக்கின்ற இராமபிரான், கம்சன் மாய்ந்துவிழ அன்று போர்புரிந்தவனை, கல்லான அகலிகையைக் காலாலே மாற்றியவனை, பசுக்கூட்டத்தைக் காக்கின்ற நாயகனை வணங்குவோம்.

மல்லோடும் கஞ்சனுடல் மாய்ந்துவிழ அன்றடர்ந்தான்
வில்லோடு என்றென்றும் விளங்குதோள் இராமபிரான்
கல்லான அகலிகையைக் காலாலே எழுப்பியவன்
நல்லாவின் நிரைகாத்த நாயகனை வணங்குதுமே.

4. கண்ணன் யமுனையில் நீராடி நின்ற கோபியரின் துகில்களை ஒருங்கே வாரிக்கொண்டு, அந்நதிக்கரையில் இருந்த குருந்த மரத்தின் மீது ஏறப்போவதைக் கண்ட அசுரன், கம்சனால் ஏவப்பட்டவன், கண்ணனை நலிவதற்காக அம்மரத்தில் ஆவேசித்துக் கிடந்தான். அதனையறிந்த கண்ணன், அம்மரத்தை முறித்துப் போட்டான்.

எருது வடிவம் கொண்ட அரிஷ்டன் என்னும் அசுரனை, ஸ்ரீகிருஷ்ணன், அவன் கொம்புகளைப் பிடித்து அசையவொட்டாமல் செய்து, தன் காலினால் அவன் வயிற்றில் ஓரடி இடித்து, அவனுடைய கொம்புகளில் ஒன்றை ஒடித்து, அதனாலேயே அடித்துக் கொன்றான்.

பூதனை, பிறரும் அறியாத நள்ளிருளில் பெற்றதாய் போல வந்து. கண்ணனை எடுத்து ஒக்கலில் வைத்து, "பால் உண்" என்று நச்சுமுலை உண்ணக் கொடுத்தாள். குழந்தையும் முலை உண்பான் போல முனிந்து உயிர் உண்டான். பேய்மகள் அலறி, மண் சோர்ந்தாள்.

பறவை உருவாய் வந்த பகன் என்னும் அசுரனை, கண்ணன் அதன் வாயலகுகளை இருபிளவாகக் கீண்டு அழித்தான்.

இவ்வாறெல்லாம் செய்து ஆயர் குலம்காத்த கடவுளை, மாலவனைப் பேரன்பு கொண்டு வணங்குவோம்.

குருந்தமரம் தானழித்துக் கொம்பானை வலியழித்து
அருந்தப்பால் தரும்பேய்ச்சி அவளுயிரைத் தான்வாங்கி

Koviloor Digital Library

வருந்தவரு பறவையாய் வகிர்ந்தாயர் குலங்காத்த

பெருத்தவனை மாலவனைப் பேரன்பால் வணங்கிடுமே.

5. ஒரு முறை, கிருஷ்ணன் மண்ணைத் தின்று விட்டதாக, அவனுடைய தோழர்கள் யசோதை யிடம் தெரிவித்தனர். வாயைத் திறந்து காட்டச் சொன்ன யசோதைக்கு, கண்ணன் தன் பவளவாயைத் திறந்து காட்டினான். அந்தப் பவளவாய்க்குள் அண்டசராசரங்களும் தெரிந்தன.

இவ்வாறு, பால் வெண்ணெய் உண்டது போதவில்லை என, மண்ணையும் தின்று, தாய்க்கு உலகத்தையும் கடலையும் வாய்க்கள் காட்டிய கோவரசை, பசுக்களுக்கெல்லாம் அரசனை வணங்குவோம்.

பால்வெண்ணெய் தானுண்டான் பற்றாது போயந்த

மால்மண்ணைத் தானுண்டான் மற்றவன்தாய் வாய்பார்க்க

நீலவான் விரியுலகம் நீர்சூழ்ந்த கடல்காட்டும்

கோலமால் எனவந்த கோவரசை வணங்குமினே.

மங்களாசாசனப் பாடல்

இத்திவ்யதேசத்தைக் குலசேகராழ்வார் ஒரு பாடலாலும், திருமங்கையாழ்வார் 41 பாடல்களாலும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

வேதச் சாத்திரம் படித்தவர்கள் வெறுத்து ஒதுக்கும் சம்சாரம் என்கிற பெரிய சமுத்திரத்தைப் பற்றியதால், அடியேன் இங்கு வந்து பிறந்தேன். இப்படி ஜனனம் எடுத்தபின், வற்றாத நீர்வளமுடைய கழனிகள் சூழ்ந்த திருவாலியில் அருள்புரியும் எம்பெருமானின் அருளைப் பெறும் பேறு பெற்றேன். அதனால், இனி பிறவாமை என்ற பாக்கியமும் பெற்றவனானேன் என்று கூறும் திருமங்கையாழ்வாரின் மங்களாசாசனப் பாடல்.

கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே

பற்றா வந்துஅடியேன் பிறந்தேன், பிறந்தபின்னை

வற்றார் நீர்வயல்சூழ் வயலாளி யம்மானைப்

பெற்றேன், பெற்றதும் பிறவாமை பெற்றேனே.

Koviloor Digital Library

பெரியபுராணக் கதைக் களம்

பகுதி – 17

அன்பர்களே!

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாகப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாகக் காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

மேலே காணும் பதிவின்
புற வழி இணைப்புக்கு
இங்கே சொடுக்கவும்

Koviloor Digital Library

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

உ

விநாயகச் சதுர்த்தியை முன்னிட்டு 26.08.2025 மாலை நமது தென்சபாநாயகர் கோவிலில் அருள்பாலிக்கும் முக்குறுணி விநாயகருக்குச் சிறப்பாக அபிடேக ஆராதனைகள் நடைபெற்றன

ஆவணி - புரட்டாசி மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

06.09.2025 மாலை
ஸ்ரீ ஆனந்த நடராஜர் மஹா அபிடேகம்

03.09.25	வளர்பிறை ஏகாதசி	காலை	பெருமாள் வழிபாடு
05.09.25	பிரதோஷம்		
07.09.25	பௌர்ணமி	மாலை	சிவகாமி அம்மன் வழிபாடு
10.09.25	சங்கடஹர சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு
12.09.25	கார்த்திகை	மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
14.09.25	தேய்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
19.09.25	பிரதோஷம்		
29.09.25	வளர்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு

Koviloor Digital Library

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

கேள்வி:1

1. மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே! என்று அப்பர் கேட்டுக்கொண்ட ஆசை சரியானதா? வீடுபேறு,பிறவாமை வேண்டுமென எல்லா ஞானிகளும் கேட்கையில் அப்பர் இவ்வாறு மனிதப்பிறவியை மீண்டும் கேட்பதன் நோக்கம் என்ன?

பதில்:1

Koviloor Digital Library

பயிற்சிப் பேழை

ஞானசம்பந்தர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருநாவுக்கரசர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

சுந்தரர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருப்புகழ்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 44,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

Koviloor Digital Library

தற்போது சுமார் 7,590அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்குத் தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திருமதி.சோமசுந்தரி அவர்களைத் (தொலைபேசி எண் 9488124941 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

இப்போது போர்காலமாக இருப்பதால் அடிக்கடி நமது மின் நூலகம் இணைப்பு தடைப்பட்டு வருகிறது.

அவ்வாறு தடைப்பட்டு வரும் சூழலில் அதற்கு மாற்றாக தார் பிரவுசர் என்ற பிரவுசரை கொண்டு நமது நூலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ள முடியும். அதற்குரிய லிங்க் இத்துடன் இணைத்து இருக்கிறோம்

https://www.torproject.org/download/

Koviloor Digital Library

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை – கார்த்திகை

திருநெல்லை – மார்கழி

திருநெல்லை – தை

திருநெல்லை – மாசி

திருநெல்லை – பங்குனி

திருநெல்லை – சித்திரை

திருநெல்லை – வைகாசி

திருநெல்லை – ஆனி

திருநெல்லை – ஆடி

திருநெல்லை – ஆவணி

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை– கார்த்திகை

திருநெல்லை– மார்கழி

திருநெல்லை– தை

திருநெல்லை– மாசி

திருநெல்லை– பங்குனி

திருநெல்லை– சித்திரை

திருநெல்லை– வைகாசி

திருநெல்லை– ஆனி